தினமணி

# இன்றைய வேளாண் செய்திகள்

## காதலர் தின கொண்டாட்டத்துக்காக ஒசூரிலிருந்து வெளிநாடுகளுக்கு 1.80 கோடி ரோஜாக்கள் ஏற்றுமதி



**கிருஷ்ணகிரி மாவட்டம்**, ஒசூர், தேன்கனிக்கோட்டை, பேரிகை, பாகலூர், அமுதகொண்டப்பள்ளி, கக்கதாசம், தளி, சேவகனாப்பள்ளி, கெலமங்கலம், ராயக்கோட்டை மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் பசுமைக் குடில்கள் அமைக்கப்பட்டு ரோஜா மலர்கள் சாகுபடியில் விவசாயிகள் அதிகளவில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் பகுதிகளில் நிலவும் தட்பவெப்ப நிலை ரோஜா மலர் சாகுபடிக்கு உகந்த நிலையில் உள்ளது.

பெங்களூரு, மும்பை, சென்னை, கொல்கத்தா, கொச்சி உள்ளிட்ட நகரங்களை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் வெளிநாட்டு நிறுவனங்களும் ஒசூர் வட்டாரத்தில் ரோஜா மலர் சாகுபடி செய்து, கொய்மலர்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றன.

ஒசூர் பகுதி விவசாயிகள் சுமார் 5 ஆயிரம் ஏக்கர் பரப்பில் ரோஜா மலர்களைச் சாகுபடி செய்கின்றனர்.

குறிப்பாக தாஜ்மஹால், ரெட் ஜயன்ட், கஞ்ஜன் ஜங்கா, டெட்ரா வெக்ட்ரா, ரெட் ரோஸ், கார்னேஷன், கார்வென்ட், மிக்ரா போன்ற ரோஜா ரகங்கள் தற்போது அதிகளவில் சாகுபடி செய்யப்படுகின்றன.

பசுமைக் குடில் அமைத்து சாகுபடி செய்யப்படுவதால் அதிக வெப்பமும், குளிரும் இல்லாமல் ரோஜா செடிகள் நன்றாக செழித்து வளர்கின்றன.

இந்தப் பகுதியில் சாகுபடி செய்யப்படும் ரோஜா மலர்கள் பறிக்கப்பட்டு, ஒசூர் அருகே அமுதகொண்டப்பள்ளியில் உள்ள டான்ஃப்புளாரா நிறுவனத்தில் உள்ள குளிர்சாதனக் கிடங்குக்கு அனுப்பப்படுகின்றன. அங்கு அவை 7 நாள்கள் வரை வைக்கப்பட்டு பதப்படுத்தப்படுகின்றன.

பின்னர், அந்த நிறுவனத்திலேயே 30 செ.மீ. நீளம் தண்டு உள்ள ரோஜா மலர்கள் முதல் 90 செ.மீ. நீளம் தண்டு வரையுள்ள ரோஜா மலர்களை கொய்து, ரகம் பிரித்து, 10 ரோஜாக்களை ஒரு கொத்தாக கட்டி, ஒரு பெட்டியில் வைத்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இந்தப் பெட்டிகளை குளிர்சாதன வசதி செய்யப்பட்ட லாரிகளில் ஏற்றி, பெங்களூருவுக்கு கொண்டு சென்று, அங்கிருந்து விமானத்தில் வெளிநாடுகளுக்கு விவசாயிகளே நேரடியாக ஏற்றுமதி செய்கின்றனர்.

இதன் ஒருங்கிணைப்பாளராக உள்ள டான்ஃப்புளாரா நிறுவன நிர்வாக இயக்குநர் நஜீம் அகமது கூறியது:

வருகிற வெள்ளிக்கிழமை (பிப்ரவரி 14) காதலர் தினம் கொண்டாடப்பட உள்ளது. இதற்காக கடந்த 10-ஆம் தேதி வரை அறுவடை செய்யப்பட்ட கொய்மலர்களை ஏற்றுமதி செய்துவிட்டோம்.

அவை குறிப்பாக ஐரோப்பா, அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பிரிட்டன் மற்றும் வளைகுடா நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. நிகழாண்டு காதலர் தினத்துக்காக 2 கோடி மலர்கள் ஏற்றுமதி செய்ய முன்பதிவு (ஆர்டர்) வந்தது. எங்களால் போதுமான அளவு ஏற்றுமதி செய்ய முடியவில்லை. பிப்ரவரி 1-ஆம் தேதி முதல் பிப்ரவரி 10-ஆம் தேதி வரை 1.80 கோடி கொய் மலர்களை

ஏற்றுமதி செய்துள்ளோம். போதிய அவகாசம் இல்லாததால், எங்களால் 20 லட்சம் கொய் மலர்களை ஏற்றுமதி செய்ய முடியவில்லை. ஆண்டு முழுவதும் ரோஜா மலர்களை ஏற்றுமதி செய்தாலும், காதலர் தின கொண்டாட்டத்தின் போது ஒரு கொத்துக்கு ரூ.400 வரை கிடைப்பதால் இந்த வாய்ப்பை ஒவ்வொரு ஆண்டும் பயன்படுத்தி ஏற்றுமதி செய்கிறோம். கடந்த ஆண்டு 1.5 கோடி மலர்கள் ஏற்றுமதி செய்தோம். அடுத்த ஆண்டு இன்னும் கூடுதலாக ஏற்றுமதி செய்ய முன்கூட்டியே திட்டமிடுவோம் என்றார் அவர்.

## பொங்கலூர் பகுதியில் போலி விதை விற்பனை: வேளாண் அதிகாரி எச்சரிக்கை பல்லடம்,

பொங்கலூர் பகுதியில் விவசாயிகள் போலி விதைகளை வாங்கி ஏமாற வேண்டாம் என்று கோவை விதை ஆய்வுத் துணை இயக்குநர் விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கோவை விதை ஆய்வுத் துணை இயக்குநர் பொன்னுசாமி நடேசன் செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பொங்கலூர் மற்றும் பல்லடம் சுற்று வட்டாரப் பகுதிகளில் அதிக அளவில் காய்கறி சாகுபடி நடைபெற்று வருகிறது. மேலும் காய்கறி சாகுபடியில் அதிக லாபம் இருப்பதால் விவசாயிகள் காய்கறி விதைகளை தனியார் மற்றும் கூட்டுறவுத் துறை நிறுவனங்களிடமிருந்து வாங்கி பயன்படுத்தி வருகின்றனர்.

அவ்வாறு விதைகளை வாங்கும்போது, விதை விற்பனை நிலையங்கள், விதை உற்பத்திக்கான உரிமம் பெற்றுள்ளனவா என்று பார்த்து வாங்க வேண்டும். மேலும் விதை பாக்கெட்டில் விதையின் பெயர், ரகம், முளைப்புத்திறன், காலாவதி தேதி ஆகியவற்றையும் சரிபார்த்து வாங்கவேண்டும்.

அதுபோல், விற்பனைப் பட்டியலில் பெயர், முகவரி, விதையின் பெயர், ரகம், காலாவதி நாள் மற்றும் குவியல் எண்

ஆகியவை சரியாக இருக்கிறதா என்று சரிபார்த்து வாங்க வேண்டும்.

தற்போது சில விவசாயிகள் நடவுப் பணிக்கு நாற்றுகளை வாங்கிப் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் நாற்றுகளின் தேவையும் அதிகரித்து வருகிறது. நாற்று விற்பனை செய்யும் பண்ணைகள், கோவை விதை ஆய்வு துணை இயக்குநரிடம்

உரிமம் பெற்றுள்ளனவா என்று அவசியம் பார்க்க வேண்டும்.

எனவே, விவசாயிகள் கடைகளில் போலி விதைகளை வாங்கி ஏமாற வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 42.45 அடி

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை 42.45 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 283 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றிலும், வாய்க்காலிலும் தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.8 டி.எம்.சி.

## டான் டீ தொழிலாளர்களை ரெப்கோ வங்கியுடன் இணைத்து பயன்களை வழங்க நடவடிக்கை

**கூடலூர்,**

டான் டீ தொழிலாளர்களை ரெப்கோ வங்கியுன் இணைத்து பயன்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக ரெப்கோ வங்கியின் இயக்குநர் மகாலிங்கம் தெரிவித்தார்.

கடந்த இரண்டு நாள்களாக, கூடலூர் மற்றும் பந்தலூர் பகுதியில் தாயகம் திரும்பிய தோட்டத் தொழிலாளர்ளை சந்தித்துப் பேசி ஆய்வு மேற்கொண்டார் ரெப்கோ வங்கியின் இயக்குநர் மகாலிங்கம். அவர் கூறியது:

மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஒரே வங்கி ரெப்கோ வங்கிதான். தென்னிந்தியாவில் 91 கிளைகள் உள்ளன. இதில் 70க்கு மேற்பட்ட கிளைகள் தமிழ்நாட்டில் உள்ளன.

கேரளம் மற்றும் கர்நாடகத்தில் ரப்பர் தோட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வங்கி கணக்குகளை துவங்கி அதன் மூலம் நலத் திட்டங்களை வங்கி வழங்கி வருகிறது.

தமிழ்நாட்டில் மாநில அரசின் கட்டுப்பாட்டிலுள்ள தமிழ்நாடு அரசு தேயிலைத்

தோட்டக் கழகம், ரப்பர் கழகம், முந்திரி கழகம் ஆகியவற்றில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் இதுபோன்ற பயன்கள் கிடைக்க ரெப்கோ வங்கி நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

பெரும்பாலான தாயகம் திரும்பியோரின் பாஸ்போர்ட், குடும்ப அட்டைகள் உள்பட ஆவணங்கள் அரசிடம் ஓப்படைக்கப்பட்டு அவை புதுக்கோட்டை கோட்டாட்சியர் அலுவலகத்தில் பாதுகாப்பற்ற சூழலில் உள்ளது. அவற்றை உரியவர்களிடம் வழங்க ரெப்கோ வங்கி மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வங்கியில் உறுப்பினர்களின் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிற்காக நிதி உதவி உள்பட பல்வேறு உதவிகள் செய்து தரப்படுகின்றன. இத்திட்டத்தில் பெருமளவு நீலகிரி மாவட்டத்தில் உள்ளவர்கள் பயனடைந்து வருகின்றனர் என்றார்.

பேரவை உறுப்பினர்கள் சு.ஆனந்தராஜ், மோகன்தாஸ், கிருஷ்ணபாரதியார், சக்திவேல் உள்பட பலர் உடனிருந்தனர்.

**நாக்பூர் வேளாண்மை கண்காட்சி - காணொலி காட்சியில் பார்வை செய்யாறு,**

நாக்பூர் தேசிய வேளாண்மை கண்காட்சி (கிரிஸ்ட் வசந்த்) சுற்றுலா நிகழ்ச்சி பதிவு, ஒளிபரப்பின் தொடக்க நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நாக்பூரில் நடைபெற்று வரும் தேசிய வேளாண்மை கண்காட்சி (கிரிஸ்ட் வசந்த்) சுற்றுலாவுக்கு செய்யாறு வட்டாரத்தைச் சேர்ந்த 10 விவசாயிகள் உள்பட திருவண்ணாமலை மாவட்டத்தில் இருந்து சுமார் 179 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

தேசிய வேளாண்மை கண்காட்சியின் காணொலி காட்சியை செய்யாறு ஒன்றியக் குழுத் தலைவர் எம்.விமலா மகேந்திரன் தொடங்கி வைத்தார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### மனோரஞ்சிதம் சாகுபடியில் புதுமை: சாதிக்கும் மதுரை விவசாயிகள்



**மதுரை** அருகே வேடர்புளியங்குளத்தில், மனோரஞ்சிதம் பூ சாகுபடியில் விவசாயிகள் சாதனை படைத்து வருகின்றனர்.

இறைவனுக்கு உகந்த பூவாகவும், அறை அலங்கார வாசத்தில் முதன்மை பூவாகவும் கருதப்படும் இது, குறிப்பிட்ட ஒரு சில இடங்களில் மட்டுமே சாகுபடி செய்யப்படுகிறது. நல்ல மண்வளம், நீர்வளம் உள்ள இடங்களில் செழிப்பாக வளரும் தன்மை கொண்ட மனோரஞ்சிதம், இடைவெளி இல்லாமல் பலன் தரும் தன்மை கொண்ட பணப்பயிராக விவசாயிகளுக்கு வாழ்வளிக்கிறது.

மற்ற எல்லா பூக்களுமே எடை விலைக்கு விற்பனை செய்யப்படும் போது, இது மட்டும் எண்ணிக்கையின் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

வேடர்புளியங்குளத்தில் மனோரஞ்சிதம் பூ சாகுபடியில் 20 ஆண்டுகள் அனுபவம் பெற்ற விவசாயி தம்பதிகள் இருளாண்டி, பாப்பாத்தி. இவர்களின் தோட்டத்தில் மல்லிகை சாகுபடி செய்த போது, வரப்புகளில், இந்த தம்பதிகளின் மகன் ஆறுமுகம், விதைகள் எடுத்து வந்து நடவு செய்த செடிகள் எல்லாம் இன்று மரம் போல் உயர்ந்து வளர்ந்துள்ளது. இது ஒரு பலன் தராத செடி என, அப்போது இதற்கு பலரும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

பாப்பாத்தி சொல்கிறார்...

இந்த தோட்டத்தை உருவாக்கிய ஆறுமுகம், சில நாட்களுக்கு முன் ஒரு விபத்தில் சிக்கி, எங்களை விட்டு பிரிந்து விட்டான். இதை நடவு செய்யும் போது அவன் சொல்வான்... "வயதான காலத்தில் பிள்ளைகள் உதவுவது போல், இதன் பூக்கள்

உங்களுக்கு உதவும்' என்றான். அது தான் உண்மை. எங்கள் குடும்பத்தை வறுமையின் பிடியில் இருந்து காப்பாற்றியது இந்த பூக்கள் தான்.
முதலில் 20 செடிகள் தான் இருந்தது. அதன் பின் அதன் கிளைகளை பதிய வைத்து, இப்போது அடர்ந்து வளர்ந்து விட்டது. தினமும் இரண்டு நேரம் தண்ணீர் பாய்ச்சுவோம். இயற்கை உரங்கள் போடுகிறோம்.
தினமும் நூற்றுக்கணக்கான பூக்கள் பறிக்கிறோம். மதுரை மாக்கெட்டில் ஒரு பூ ரூ.3 முதல் ரூ.10 வரை விற்பனையாகும். இந்த பூக்களை பறிப்பது என்பது என்பது சாதாரண விஷயம் அல்ல. அதன் காம்பை கிள்ளி எடுக்கும் போது அருகில் அடுத்த மொட்டு இருக்கும் அதை கவனித்து எடுக்க வேண்டும். உயர்ந்த மரங்களில் பூக்களை பறிப்பது சிரமம்.
பழுத்த நிறத்தில் இருக்கும் பூக்களை பறித்த உடன் தண்ணீரில் போட்டு, அதன் பின் ஈரத்துடன் பாக்கெட்டுகளில் அடைத்து மார்க்கெட்டிற்கு அனுப்புவோம்.
இதன் காய்கள் பழுத்தால் மாம்பழம், கொய்யாப்பழம் போல் வாசம் வீசும்.
மாலை நேரத்தில் பறிக்கும் பருவத்தில் உள்ள பூக்களின் வாசம் தோட்டத்தில் நிறைந்திருக்கும்.
அடர்த்தியாக இந்த செடிகள் வளர்ந்திருந்தால் அதன் கீழ்பகுதிகளில் பாம்புகள் இருப்பது சகஜமானது. பூக்கள் பறிக்க செல்லும் போது அவை ஓடிவிடும்.
பிற மலர் சாகுபடிகளை விட, இந்த மனோரஞ்சிதப்பூ சாகுபடி விவசாயிகளுக்கு லாபத்தை தரும். பதியம் செய்து நடவு செய்தால், ஒரு சில ஆண்டுகளில் பூக்கள் வரும். விதைகள் மூலம் நடவு செய்தால் நான்கு, ஐந்து ஆண்டுகளுக்கு பின் தான் பூக்கள் பூக்கும், என்கிறார், இந்த சாதனை விவசாயி.

## சின்ன சின்ன செய்திகள்

**விதை உரக்கட்டு நுட்பம்**: மூன்று பாகங்களை உள்ளடக்கியது. மேல் நோக்கி இருப்பது நேர்த்தி செய்யப்பட்ட விதை மத்தியில் இருப்பது ஊட்டமேற்றிய எரு வில்லைகள், அடிப்பகுதியில் இருப்பது சமச்சீர் உர வில்லை. இவை எளிதில் மக்கக்கூடிய காகிதத்தைக் கொண்டு சுற்றப்பட்டுள்ளன. கடைசியில் இந்த மூன்றையும் ஒன்றாக இணைத்து செய்தித்தாள்களைக் கொண்டு சுற்றி அதன்

நுனிப்பகுதி பசையினால் ஒட்டடப்பட்டுள்ளது. இதன் மூலம் பயிரின் விதைகளை மண்ணில் ஊன்றும் போது விதைக்கு அடியில் அல்லது பக்கத்தில் செறிவூட்டடப்பட்ட எரு, உரங்கள் பதிக்கப்படுகின்றன. சத்துக்களை நாள்தோறும் கொஞ்சம் கொஞ்சமாக வெளியிடுவதால் பயிரின் வளர்ச்சி ஊக்குவிக்கப்படுகிறது. மேலும் சத்து இழப்புகள் குறைகின்றன. விதை உரக்கட்டில் பயன்தரும் நுண்ணுயிர்களும், நுண்ணூட்டங்களும், பூச்சிகொல்லி மருந்துகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

ஒரு விரல் அளவுள்ள ஒவ்வொரு விதைக் கட்டையும் மண்ணில் செங்குத்தாகவோ அல்லது கிடைமட்டமாகவோ பதிக்க வேண்டும். பயிரிடும் காலத்திற்கு முன்பே விதை உரக்கட்டுகளை தயாரித்து வைத்துக் கொள்ளலாம்.

அதிக அளவில் உரக்கட்டுகள் தயாரிக்க இயந்திரங்களை பயன்படுத்தும்போது அதன் தயாரிப்பு செலவு மிகவும் குறைகிறது. பருத்தி, மக்காச்சோளம், நெல், கார்னேசன், செண்டுமல்லி, காலிபிளவர் பயிர்களை பயிரிட இந்த விதை உரக்கட்டு தொழில்நுட்பம் முறை உகந்ததாகக் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் விவரங்களுக்குதொடர்பு முகவரி: முனைவர் கோ.அருள் மொழிச்செல்வன், மண்ணியல் வேளாண் வேதியல் துறை, த.வே.ப.கழகம், கோயம்புத்தூர் - 641 001. போன்: 661 1485, 661 1235.

**முருங்கை எண்ணெய் (Ben Oil) :** முருங்கைகளின் விதையிலிருந்து சுமார் 42 சதவீதம் எண்ணெய் பெறப்படுகிறது. எண்ணெய் நல்ல மஞ்சள் நிறத்தில் இருக்கும். இது ஒட்டும் தன்மையுடையது. இது இயந்திரங்களில் உராய்வு நீக்கியாக பயன்படுகிறது. மேலும் இது சமையல் எண்ணையாகவும் பயன்படுகிறது. இந்த எண்ணெய் ஆவியாகும் தன்மையுடையது. பொருட்களை உறிஞ்சு தக்க வைத்துக் கொள்ளும் தன்மையுடையதால் வாசனைத் திரவியங்கள் தயாரிக்கப்படும். தொழிற்சாலைகளில் பயன்படுகிறது. முருங்கை எண்ணெயில் 13 சதம் நிறைவுற்ற கொழுப்பு அமிலமும் உள்ளன. மற்ற தாவர எண்ணெய்களை விட இதில் 40 சதம் அதிக அளவு (72%) ஓலியம் அமிலம் உள்ளது.

தாவர வளர்ச்சி ஊக்கிகள்: முருங்கை இலையிலிருந்து பெறப்படும் சாறுடன் 80

சதம் எத்தனால் சேர்த்து அதனை நாம் தாவர வளர்ச்சி ஊக்கியாக பயன்படுத்தலாம். அந்த சாறு இளம் செடிகள் வளர்வதற்கு இயற்கை மருந்தாகப் பயன்படுகிறது. செடிகளை உறுதியாக்கவும், பூச்சி நோய்களில் இருந்து பாதுகாக்கவும், வளர்ச்சி ஊக்கிகள் பயன்படுகின்றன. இந்த வளர்ச்சி ஹார்மோன்களைத் தெளிப்பதன் மூலம் பெரிய நீள மான காய்கள், பழங்கள் கிடைப்பதோடு காய்களின் எடை அதிகரிக்கும். அதிக விளைச்சல் கிடைக்கும்.
உணவு பொருட்களைப் பாதுகாப்பதில் முருங்கையின் பங்கு: முருங்கை இலையில் அதிக அளவில் வைட்டமின்கள், புரதங்கள் உள்ளன. உணவுப் பொருட்களான சாஸ், பழச்சாறு, நறுமணப்பொருட்கள், பால், ரொட்டி, நூடுல்ஸ் போன்றவற்றை பாதுகாப்பதற்கு முருங்கை இலை பயன்படுகிறது.
மேலும் விபரங்களுக்கு தொடர்பு முகவரி: முனைவர் பி.பொன்னுச்சாமி, தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், த.வே.ப.கழகம், கோயம்புத்தூர் -641 003., போன்: 0422 - 661 1283.

**உளுந்து மதுரை 1 :** புதிய ரகம் வயது 70 -75 நாட்கள். பருவம் - புரட்டாசிப் பட்டம் மகசூல் எக்டருக்கு 790 கிலோ அதிகபட்சமாக 1000 கிலோ கிடைக்கும். கோ 6 மற்றும் வம்பன் 6 ரகங்களை விட முறையே 15 சதம் மற்றும் 13 சதம் கூடுதல் விளைச்சல் கொடுக்கும்.
சிறப்பியல்புகள்: அதிக மாவு பொங்கும் தன்மையுடையது. மஞ்சள் தேமல் நோய் மற்றும் களப்புழு ஆகியவற்றின் தாக்குதலுக்கு அதிக எதிர்ப்புதிறன் கொண்டது. நீலகிரி, கன்னியாகுமரி, தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களின் நீங்கலாக தமிழகம் முழுவதும் பயிரிடலாம்.
**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## "வாடல் நோயில்' இருந்து பருத்தியை காக்க

பருத்தி பயிரை தாக்கி மகசூல் இழப்பை ஏற்படுத்தக்கூடிய நோய்களில் முக்கியமானது "வெர்டிசில்லியம்' என்னும் வாடல் நோய். இது பாதித்தால், செடிகளில் இலைகளின் நரம்புகள் பச்சையாகவும், மற்ற பகுதிகள் மஞ்சளாகவும்

மாறும். மஞ்சள் நிறப்பகுதி வாடி கருகிவிடும். எனவே இலை புலிவரிக்கோடுகள் போல தோன்றும். பின் இலைகள் காய்ந்து உதிரும். படிப்படியாக செடிகள் காயும். பருத்தி விதைக்கு முன் ஆழமாக கோடை உழவு செய்து நோய்க்காரணிகளை சூரியனின் வெப்பத்திற்கு உட்படுத்தி அழிக்க வேண்டும். விதைக்கும் முன் எக்டேருக்கு 150 கிலோ வேப்பம் புண்ணாக்கு இடவேண்டும். தொழு உரம் எக்டேருக்கு 12.5 டன் இடவேண்டும்.

விதையை நேர்த்தி செய்கையில், விரிடி என்ற உயிர் பூஞ்சானக்கொல்லி 4 கிராம் அல்லது கார்பன்டைசிம் 2 கிராம் அல்லது திரம் 4 கிராம், ஒரு கிலோ விதைக்கு என்ற அளவில் கலந்து விதைநேர்த்தி செய்ய வேண்டும்.

**நோய் தாக்கியபின்:** நோய் தாக்கியபின் என்றால் பூஞ்சானக் கொல்லி ஒரு கிராம் பவுடர் ஒருலிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்து நோய் தாக்கப்பட்ட செடிகளின் வேரைச்சுற்றி நன்கு நனையும்படி ஊற்ற வேண்டும். நோய் தாக்கிய செடியின் அருகில் உள்ள மற்ற செடிகளுக்கும் ஊற்ற வேண்டும். மேற்கண்ட முறைகளை கையாண்டு இந்த வாடல் நோயில் இருந்து பருத்திச் செடியை காக்கலாம். மகசூலையும் பெருக்கலாம்.

**கி.ராஜேந்திரன்,**

**வேளாண்மை துணை இயக்குனர், மதுரை.**

**நீர் தாங்கிகளின் வரைபடம் தயாரிக்கும் ஆய்வு பணி: கடலூர் மாவட்டத்தில் துவக்கம்**



வடலூர்: மத்திய நிலத்தடி நீர் வாரியம் சார்பில், கடலூர் மாவட்டத்தில், நீர்தாங்கிகளின் வரைபடம் தயாரிக்க, ஆய்வுப் பணி, நேற்று துவங்கியது.

சென்னையை, தலைமை இடமாக கொண்டு இயங்கும் தென் கிழக்கு கடலோர மண்டலம், தமிழ்நாடு, புதுச்சேரி மாநிலங்களில் நீராதாரத்தை கணக்கீடு செய்து, அறிவியல் அறிக்கைகளை, மத்திய நீர்வள அமைச்சகத்துக்கு அளிக்கிறது. இதன் மூலம் இந்த பகுதியில், நீர் வளத்தை மேம்படுத்த கொள்கைகளை வகுக்க, மத்திய, மாநில அரசின் துறைகளுக்கு உதவியாக உள்ளது.

## நவீன கருவிகள்:

பன்னிரெண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில், நீர்வள அமைச்சகம் நீர்தாங்கிகளின் வரைபடம் தயாரிக்கும் ஆய்வை, நடைமுறைப்படுத்த திட்ட மிட்டுள்ளது. இந்த ஆய்வை, தேசிய புவியியல் ஆய்வு நிறுவன விஞ்ஞானிகள் ரங்கராஜன், சேம்வன்சுஹி ஆகியோர் தலைமையில், டென்மார்க் நாட்டின் நவீன கருவிகள் மூலம், நடத்தி வருகின்றனர். இந்தியாவில், ஆறு இடங்களில் தகவல் சேகரிக்க திட்டமிடப்பட்டு, பஞ்சாப், கர்நாடகா, மகாராஷ்டிரா, ராஜஸ்தானில் ஆய்வு முடிக்கப்பட்டு, தற்போது தமிழகத்தில், கடலூர் மாவட்டத்தில் ஆய்வு நடைபெற உள்ளது. ஆய்வு பணியின் தொடக்க விழா, குறிஞ்சிப்பாடி அடுத்த பொட்ட வெளி கிராமத்தில் தற்காலிகமாக நடந்தது.

## 25 கிலோ மீட்டர்:

மத்திய நிலத்தடி நீர் வாரிய தலைவர் சுகில் குப்தா தலைமை தாங்கி, தொடக்கி வைத்தார். தென் கிழக்கு கடலோர மண்டல இயக்குனர் சம்பத்குமார், ஊராட்சி தலைவர் வேலு உட்பட, அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர். 20 நாட்கள் நடைபெறும் இந்த ஆய்வில், நீர் தாங்கிகளின் வரைபடம் தயாரித்தல், நிலவியல், நீர் நிலவியல், பவுதிகம், ரசாயனம் போன்ற பல்துறை அறிவியல் செயல்முறைகள் மூலம் ஆய்வு நடத்தி, நீர்தாங்கிகளின் பக்கவாட்டு மற்றும் செங்குத்து அளவுகளையும், நிலத்தடி நீர் தரமும் கண்டறியப்பட உள்ளது. இது, நிலத்தடி நீரின் மிகச் சிறந்த மேலாண்மை திட்டம் தீட்ட வழி வகுக்கும். கடலூர் மாவட்டத்தில், முதுநகர் முதல் பெருமாள் ஏரிக்கரை, பரவனாற்று பகுதி,

நெய்வேலி ஒட்டியுள்ள பகுதியில் என, 25 கிலோ மீட்டர் சுற்றளவில், ஹெலிகாப்டரில் பொருத்தப்பட்டுள்ள நவீன கருவி மூலம், ஆய்வு செய்யப்படுகிறது.

### வறட்சியால் வரத்து குறைவு: வாழை இலை விலை ஏற்றம்: ஒரு கட்டின் விலை ரூ. 3,000

**வத்தலக்குண்டு:** வத்தலக்குண்டு பகுதியில் நிலவும் வறட்சியால், சந்தைக்கு வாழை இலைகள், வரத்து குறைந்து வருகிறது. பிற மாவட்ட வியாபாரிகள் இங்கு முற்றுகையிடுவதால் இலைக் கட்டு நேற்று 3 ஆயிரம் ரூபாய்க்கு விற்றது. வத்தலக்குண்டில் வாழை இலை மார்க்கெட் 50 ஆண்டுகளை கடந்து செயல்பட்டு வருகிறது. ஆத்தூர், நிலக்கோட்டை, குள்ளப்புரம், தேவதானப்பட்டி, கெங்குவார்பட்டி, கண்ணாபட்டி பகுதிகளில் இருந்து இலைக் கட்டுகள் விற்பனைக்கு வருகின்றன. அங்கிருந்து தினமும் சென்னை, பெங்களூரு, சேலம், நாமக்கல், திருச்செங்கோடு பகுதிகளுக்கு வாழை இலை விற்பனைக்கு செல்கிறது. இப்பகுதியில் நிலவும் வறட்சியால் சந்தைக்கு இலை வரத்து குறைந்து உள்ளது. தினமும் 8 ஆயிரம் இலைக்கட்டுகள் விற்பனையாகும் சந்தையில், 3 ஆயிரத்திற்கும் குறைவான இலை கட்டுகளே விற்பனைக்கு வருகின்றன. அவற்றை வாங்குவதற்கு வெளியூர் வியாபாரிகள் வத்தலக்குண்டு சந்தையில் குவிகின்றனர். இதனால், இலைக்கு கிராக்கி ஏற்பட்டு, நேற்று 200 இலை கொண்ட ஒரு கட்டு, அதிகபட்சமாக ரூ.3 ஆயிரத்திற்கும், குறைந்த பட்சமாக ரூ.ஆயிரத்து 500 க்கும் விற்றது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சில்லரை விற்பனையில் ஒரு இலையின் விலை ரூ. 15 ஆக உள்ளது. கமிஷன் கடை உரிமையாளர் தியாகராஜன் கூறுகையில், "வியாபாரிகளுக்கு இலை கட்டு கொடுக்க முடியவில்லை. தை மாதமே இப்படி என்றால், கோடை யில் எப்படி சமாளிக்கப் போகிறோம் என தெரியவில்லை," என்றார்.

## வெற்றிலை விலை ஏற்றத்தால் மார்க்கெட்டில் பாக்கு விலை சரிவு

**சேலம்:** வெற்றிலை விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால், சேலம் மார்க்கெட்டில் பாக்குக்கு உரிய விலை கிடைக்கவில்லை என, விவசாயிகள் கூறுகின்றனர்.
சேலம் மாவட்டத்தில், வாழப்பாடி, சிங்கிபுரம், பள்ளக்காடு, செந்தாரப்பட்டி, குறிச்சி, பேளூர், மணக்காடு மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில், பாக்குத் தோட்டங்கள் உள்ளது. பாக்கு மரத்திலிருந்து பறிக்கப்படும் பாக்குகள் சேலம், செவ்வாய்ப்பேட்டை பால் மார்க்கெட்டில், ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க்கிழமை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். நேற்று, பாக்கு வரத்து சற்று அதிகமாக இருந்தாலும், விலை கிடைக்கவில்லை என, விவசாயிகள் கூறினர்.
மேலும், அவர்கள் கூறியதாவது:
நவம்பர், டிசம்பர், ஜனவரி, 20ம் தேதி வரை பாக்குக்கு ஓரளவு விலை கிடைத்தது. வெற்றிலை விலை உயர்வு காரணமாக, தற்போது, பாக்கு விலை சரிந்துள்ளது. வெற்றிலை விலை குறைவாக இருக்கும் சமயத்தில், பாக்குகளின் விலை உச்சத்தில் இருக்கும்.
நேற்றைய விற்பனையில், 70 கிலோ எடை கொண்ட, நூற்றுக்கும் மேற்பட்ட பாக்கு மூட்டைகள் வரத்தாகின. பாக்கு ஒரு கிலோ, 380 முதல், 400 ரூபாய் வரை விற்பனையானது. கிலோவுக்கு, 40 முதல், 50 ரூபாய் வரை குறைந்துள்ளது. தூள் பாக்கு ஒரு கிலோ, 410 முதல், 430 ரூபாய் வரை விற்பனையானது. கொட்டை பாக்கு, ஒரு கிலோ, 180 முதல், 190 ரூபாய் வரை விற்பனையானது. ஈரோடு, அந்தியூர், பனமரத்துப்பட்டி, ஆட்டையாம்பட்டி, பகுதியை சேர்ந்த வியாபாரிகள் பாக்குகளை வாங்கிச் சென்றனர்.

## எ.வடக்குப்பத்தில் "எள்' விதைப்பு தீவிரம்

**மங்கலம்பேட்டை :** எ.வடக்குப்பத்தில் "எள்' விதைக்கும் பணியில், விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். மங்கலம்பேட்டை அடுத்த எ.வடக்குப்பம், சின்னவடவாடி கிராம விவசாயிகள் கிணற்று நீர் பாசனம் மூலம் "எள்' விதைப்பு பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.
எ.வடக்குப்பம் விவசாயி ராஜாங்கம் கூறுகையில், " ஒரு ஏக்கரில் "எள்'

பயிரிட்டுள்ளேன். பெரும்பாலும் கிணறு, போர்வெல் வசதியுடைய விவசாயிகள் மட்டுமே எள் விதைப்பது வழக்கம். எள் பயிருக்கு மூன்று முறை தண்ணீர் பாய்ச்சினாலே போதுமானது. தை மாதம் விதைக்கப்படும் எள்; நன்கு விளைந்து சித்திரையில் அறுவடைக்கு தயாராகிவிடும்' என்றார்.

## சொட்டு நீர் பாசனத்துக்கு மாறும் விவசாயிகள் தண்ணீர் பற்றாக்குறையால் புதிய முயற்சி

**கோபிசெட்டிபாளையம்:** ஈரோடு மாவட்டத்தில், பாசனங்களுக்கு தண்ணீர் நிறுத்தப்பட்டதால், சொட்டு நீர் பயன்பாட்டுக்கு, விவசாயிகள் மீண்டும் மாற துவங்கி உள்ளனர்.

அரக்கன்கோட்டை, தடப்பள்ளி, கீழ்பவானி பாசன பகுதிகளில், பவானிசாகர் அணையில் இருந்து விடப்படும் தண்ணீரை கொண்டு, விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கோபிக்கு தெற்கு பகுதியில் உள்ள சிறுவலூர், கொளப்பலூர், கெட்டிசேவியூர், குருமந்தூர், நம்பியூர் உள்ளிட்ட பகுதிகளில், கிணற்று நீரை நம்பியே விவசாயம் செய்யப்படுகிறது. குறிப்பாக பருவ காலங்களில் பெய்யும் மழை நீரே, ஆதாரமாக கொண்டே, மானாவாரி நிலங்கள் உள்ளது. கோபி பகுதியை சேர்ந்த விவசாயிகள் மானாவாரி நிலங்களில் மஞ்சள், வாழை, கரும்பு போன்றவை பயிர்களை பயிரிடுகின்றனர்.

ஈரோடு மாவட்டத்தில் பெரும்பள்ளம், சஞ்சீவிராயன் ஏரி, ஓடத்துறை ஏரி, தண்ணீர்பந்தல் ஏரி, குண்டேரிப்பள்ளம் அணை, அனந்தசாகர் ஏரி, வரட்டுபள்ளம் அணை உள்ளிட்டவை உள்ளன. கடந்த, இரண்டு பருவத்தில், மழை இன்றி மானாவாரி நிலங்களில் அதிகளவில் விவசாய பணிகள் நடக்கவில்லை. பருவ மழை இல்லாததால், கோபி சுற்று வட்டாரத்தில் உள்ள ஏரிகள், குளம், கசிவு நீர் குட்டைகள் வறண்டுள்ளது. நிலத்தடி நீர் மட்டம் பாதிப்பு, விவசாய கிணறுகளில் தண்ணீர் குறைந்ததால், விவசாய பணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு, பவானிசாகர் நீர்பிடிப்பு பகுதியில் பெய்த மழையால், அணையின் நீர்மட்டம் சிறிதளவு உயர்ந்ததால், பாசனங்களுக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. மஞ்சள், வாழை, கரும்பு பயிரிட்ட விவசாயிகள் பலர், நெல் சாகுபடிக்கு

மாறியுள்ளனர். மீண்டும் வறட்சி நிலவ துவங்கியதால், தண்ணீர் பற்றாக்குறை காரணமாக, பெரும்பாலான விவசாயிகள் சொட்டு நீர் பாசனத்துக்கு மாறி வருகின்றனர்.

கோபி பகுதியை சேர்ந்த விவசாயிகள் கூறியதாவது:

ஈரோடு மாவட்டத்தில், அனைத்து கசிவு நீர் குட்டை, குளம், அணை என அனைத்தும் வறண்டது. நிலத்தடி நீர்மட்டம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால், நெல் நடவு பணி நடக்கவில்லை. தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டதால், சொட்டு நீர் பாசனத்தின் மூலம் வாழை, கரும்பு, மஞ்சள் போன்றவை பயிரிடப்பட்டுள்ளன, என்றனர்.

தோட்டக்கலை துறை அதிகாரி கூறியதாவது:

ஈரோடு மாவட்டத்தில் கடந்தாண்டு, ஒவ்வொரு வட்டாரத்திலும் சராசரியாக, 150 விவசாயிகள் வரை, சொட்டு நீர் பாசனம் பயன்படுத்தினர். ஒரு ஏக்கர் முதல், ஐந்து ஏக்கர் வரையிலான நிலங்களுக்கு, சொட்டு நீர் பாசனம் வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டு பாசனங்களுக்கு தண்ணீர் திறக்கப்பட்டதால், சொட்டு நீர் பயன்பாடு சிறிது குறைந்தது.

நெல், மஞ்சள் அனைத்து அறுவடை நெருங்கி விட்டது. அடுத்த சாகுபடிக்கு விவசாயிகள் துவங்க வேண்டும் என்பதால், நடப்பாண்டு சொட்டு நீர் பாசனம் கேட்டு, விண்ணப்பம் கொடுப்போரின் எண்ணிக்கை, அதிகளவில் இருக்கும், என எதிர்பார்க்கிறோம், என்றனர்.

## கோழிகளுக்கு ராணிகெட் நோய் அறிகுறி! 1.15 லட்சம் தடுப்பூசி வருகை

**ஈரோடு:** கோடை காலத்தில், நாட்டு கோழிகளை தாக்கும், ராணிகெட் நோய்களில் இருந்து பாதுகாக்க வசதியாக, ஈரோடு கால்நடை பராமரிப்பு துறை சார்பில், 1.15 லட்சம் தடுப்பூசி கோழிகளுக்கு போடப்பட உள்ளது. நாட்டுக்கோழி வளர்ப்பு, ஈரோடு மாவட்டத்தில், ஒரு பெரும் தொழிலாக நடக்கிறது. நாட்டுக்கோழிகள், வலுவான உடல் கட்டுக்காகவும், கட்டான கறிச்சேர்க்கைக்காகவும், முட்டையிடும் திறனுக்காகவும் வளர்க்கப்படுகின்றன.

நாட்டு கோழிகள் அதிக நோய் எதிர்ப்புத்திறன் கொண்டவை. இருப்பினும்

கோடை காலத்தில் நாட்டுக்கோழிகள் "ராணிகெட்' நோயால் அதிகம் பாதிக்கப்படுகிறது. ராணிகெட் நோய் என்பது நச்சுயிரியல் ஏற்படும் தொற்று நோயாகும். இந்நோய் தீவனம், குடிநீர், காற்று மூலம் எளிதாக பரவும் தன்மை கொண்டவையாகும். நோயால் பாதிக்கப்பட்ட கோழிகள் வெள்ளையாகவும், பச்சையாகவும் கழியும். மூச்சு திணறல், நடுக்கம், வாதம் மற்றும் தீவனம் உட்கொள்ளும் அளவு குறைந்துவிடும். இந்நோயால் பாதிக்கப்பட்ட கோழிகள், தலையை இரு கால்களுக்கு இடையில் சொருகிக் கொள்ளும். இதனை பெரும்பாலும் வெள்ளை கழிச்சல் நோய் என்றே அழைக்கப்படுகிறது.
இந்நோயால் இறந்த கோழிகளின் முன் இரைப்பையில் ரத்தப்புள்ளிகளும், குடலில் புரையோடிய புண்களும் காணப்படும். இவையெல்லாம் நோயின் அறிகுறிகளாகும்.
இந்நோயை தடுக்க, வாரந்தோறும் சனிக்கிழமையன்று, ராணிகெட் நோய்க்கு, ஆர்.டி.வி.கே., என்ற தடுப்பூசி, கால்நடை மருந்தகங்களில் இலவசமாக வழங்கப்படுகிறது.
இதற்காக, ஈரோடு கால்நடை பராமரிப்பு துறை சார்பில், 1.15 லட்சம் தடுப்பூசிகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. இந்நோய் அறிகுறிகள் சில இடங்களின் தென்படுகிறது. அறிகுறியை அறிந்து வருவோருக்கு உடனடியாக சிகிச்சை வழங்கப்படுகிறது. அப்பகுதியில் நோய் பரவாமல் தடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, நாட்டுக்கோழி வளர்ப்போர் அனைவரும் ராணிகெட் தடுப்பூசி செலுத்தி, இந்நோய் வராமல் தடுக்க பண்ணையாளர்களை, கால்நடை பராமரிப்பு துறை அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

**குறைந்தது கரும்பு, மஞ்சள் சாகுபடி மக்காச்சோளம், நிலக்கடலை அதிகரிப்பு**

**ஈரோடு:** ஈரோடு மாவட்டத்தில் மக்காச்சோளம், நிலக்கடலை சாகுபடி, 3,000 ஹெக்டர் வரை அதிகரித்தும், பணப்பயிரான மஞ்சள், 2,500 ஹெக்டர் கரும்பு, 1,000 ஹெக்டர் பயிரிடும் பரப்பளவு குறைத்துள்ளது. ஈரோடு மாவட்டத்தில் கீழ்பவானி, தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, காலிங்கராயன் வாய்க்கால் பாசனம் மூலம், நெல், கரும்பு, மஞ்சள் உள்ளிட்ட பயிர்களை, 3 லட்சம் ஹெக்டரில்

விவசாயிகள் பயிரிட்டு வந்தனர். தண்ணீர் குறைவாக உள்ள காலங்களில், மக்காச்சோளம், நிலக்கடலை, எள், மரவள்ளி, வாழை உள்ளிட்ட பயிர்களை விவசாயிகள் பயிரிடுவது வழக்கமாகும். கடந்தாண்டு வறட்சிக்கு பின், மழையால் அணைகள் நிரம்பியதால், விவசாயிகள் வழக்கம்போல நெல் பயிரிட்டனர். போதிய அளவு தண்ணீர் கிடைத்தபோதிலும், மாவட்டத்தில் பணப்பயிரான மஞ்சள், கரும்பு சாகுபடியை, விவசாயிகள் குறைத்துக்கொண்டு, கோழிப்பண்ணைகளுக்கு தேவையான மக்காச்சோளம், நிலக்கடலையை அதிகம் பயிரிட்டிருந்தனர். இதுகுறித்து வேளாண்துறை அதிகாரிகள் கூறியதாவது: ஈரோடு மாவட்ட விவசாயிகள், மஞ்சள் விலை சரிந்ததாலும், வறட்சியால் கரும்பு காய்ந்து பாதிக்கப்பட்டதால், மாற்று பயிர்களை பயிரிட்டனர். கடந்தாண்டு மஞ்சள், 8,165 ஏக்கரும், நடப்பாண்டு, 5,693 ஏக்கரில் மட்டும் பயிரிட்டுள்ளனர். கரும்பு, 7,117 ஏக்கரில் இருந்து, 5,988 ஏக்கராக குறைந்தது. மரவள்ளி, 3,120 ஏக்கரில் இருந்து, 2,882 ஏக்கராகவும், வாழை, 5,429 ஏக்கரில் இருந்து, 5,266 ஏக்கராகவும், பருத்தி, 210 ஏக்கரில் இருந்து, 193 ஏக்கராக சாகுபடி பரப்பளவு குறைந்துள்ளது. அதே சமயம், கடந்தாண்டு எள், 441 ஏக்கரில் இருந்து, நடப்பாண்டு, 2,664 ஏக்கராக சாகுபடி பரப்பளவு அதிகரித்துள்ளது. மல்லிகை, 1,093 ஏக்கரில் இருந்து, 1,212 ஏக்கராகவும், நிலக்கடலை, 11,278 ஏக்கரில் இருந்து, 15,008 ஏக்கராக அதிகரித்துள்ளது. கோழிப்பண்ணைகளுக்கு தீவனமாக தேவைப்படுவதால், கடந்தாண்டு, 11,757 ஏக்கரில் மக்காச்சோளம் பயிரிட்ட விவசாயிகள், நடப்பாண்டு, 14,423 ஏக்கரில் பயிரிட்டுள்ளனர். விவசாயிகள் மத்தியில் உடனுக்குடன் விற்பனை செய்யக்கூடிய பயிர்களை பயிரிடுவதில் ஆர்வம் அதிகரித்து வருகிறது, என்றனர்.

## கோடைகால பயிர் சாகுபடி பயிற்சி முகாம்

**லாலாப்பேட்டை:** கிருஷ்ணராயபுரம் வட்டாரத்தில் கட்டளை கிராமத்தில் கோடைகால பயிர்கள் சாகுபடி பயற்சி முகாம் நடந்தது.இதில், ரெங்கநாதபுரம் பஞ்., தலைவர் சுமித்ராதேவி தலைமை வகித்தார். மாவட்ட உழவர் பயிற்சி நிலைய

வேளாண் துணை இயக்குநர் மதனகோபால், வட்டார வேளாண் உதவி இயக்குநர் பாலகிருஷ்ணன் முன்னிலை வகித்தனர்.

நெல், சிறு தானியங்கள் மற்றும் பயறுவகைள் சாகுபடி குறித்து, அதன் பயன் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. கோடை காலத்தில் பயிர் சாகுபடி அவசியம் மற்றும் தொழில் நுட்பம் பற்றி ஆலோசனை வழங்கப்பட்டது. இதுமட்டுமல்லாது விவசாயிகள் சந்தேகங்களுக்கு, வேளாண் அதிகாரிகள் விளக்கம் அளித்தனர். முகாமில், வேளாண் அலுவலர் ராஜு, துணை வேளாண் அலுவலர் ராஜவேலு, அட்மா வட்டார தொழில் நுட்ப மேலாளர் முரளிகிருஷ்ணன் உட்பட பலர் பங்கேற்றனர்.

## மீன்துறை அலுவலகங்கள் ஒரே இடத்தில் செயல்படும்

**நாகர்கோவில் :** குமரி மாவட்ட கலெக்டர் நாகராஜன் வெளியிட்ட செய்திகுறிப்பில் கூறியுள்ளதாவது: நாகர்கோவில், வடசேரியில் செய்லபடும் மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தின் மேல் தளத்தில் இன்று முதல் மீன்துறை துணை இயக்குநர் மண்டல அலுவலகம் செயல்படும். மீன்துறை உதவி இயக்குநர் அலவலகத்தின் மேல்தளத்தில் செயல்பட்டு வந்த நாகர்கோவில் மீன்பிடி துறைமுக கோட்ட செயற்பொறியாளர் அலுவலகம், 7சி குறிஞ்சி தெரு, சற்குண வீதி, ராமவர்மபுரம், நாகர்கோவில்-1 என்ற முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

## கால்நடை கிளை நிலையம் மருந்தகமாக தரம் உயர்வு

**காஞ்சிபுரம்:** காஞ்சிபுரம் மாவட்டத்தில், பொலம்பாக்கம் கால்நடை கிளை உதவி நிலையம், கால்நடை மருந்தகமாக தரம் உயத்தப்பட்டு உள்ளது. மதுராந்தகம் ஒன்றியம், பொலம்பாக்கம் கால்நடை கிளை உதவி நிலையம், கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்த, மாநில கால்நடைத்துறை அனுமதி அளித்துள்ளது. இம்மருந்தகத்தில், மருத்துவர், ஆய்வாளர், உதவியாளர் என, மூன்று பணியிடங்கள் ஏற்படுத்தப்பட உள்ளன என, கால்நடை துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## சூரியகாந்தியில் மூன்று புதிய ரகங்கள்: காஞ்சியில் மாதிரி தோட்டங்கள்

**படப்பை:** புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள, மூன்று சூரியகாந்தி ரகங்கள், காஞ்சிபுரம் மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட, மாதிரி தோட்டங்களில் சோதனை முறையில் பயிரிடப்பட்டுள்ளன.

சூரியகாந்தியில் ஆராய்ச்சி செய்து வரும், கோயம்புத்தூர் வேளாண் பல்கலைக்கழகம், இதில், புதிதாக மூன்று வகையான பெயரிடப்படாத சூரியகாந்தி புதிய ரகங்கள் கண்டுபிடித்துள்ளது. இந்த மூன்று ரகங்களில், பயிர்கள் உட்கொள்ளும் தண்ணீர் தேவை, உயிர் உரங்கள், ரசாயன உரங்கள் தேவை, தட்ப வெப்ப நிலையை தாங்கும் திறன், நோய் எதிர்ப்புத் திறன், அவற்றைத் தாக்கும் நோய் மற்றும் பூச்சி இனங்கள் என, பல்வேறு அம்சங்கள் குறித்தும், ஆய்வு செய்வதற்காக, மூன்று, ரகங்களிலும் சூரியகாந்தி விதைகளை தயாரித்து, வேளாண் துறைக்கு கொடுத்தது. இந்த மூன்று ரகங்களும் மாநிலத்தின், பல பகுதிகளிலும் சோதனை அடிப்படையில் 'அனுசரனை ஆராய்ச்சி' என்ற பெயரில் வேளாண் துறை பயிரிட்டு உள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தில், படப்பை, ஸ்ரீபெரும்புதூர், மதுராந்தகம், அச்சரப்பாக்கம், திருப்போரூர் ஆகிய இடங்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட நிலங்களில், கடந்த டிசம்பர் 13ம் தேதி விதைக்கப்பட்டது. இதுகுறித்து, குன்றத்தூர் ஒன்றிய வேளாண் உதவி இயக்குனர் கெக்டர் கூறுகையில், "இந்த மூன்று ரகங்களும், 90 நாட்களில் அறுவடைக்கு தயாராகிவிடும். ஆய்வு முடிவுடன் மாதிரிகள் சேகரித்து, கோயம்புத்தூர் வேளாண் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கப்படும். இவற்றில் எது சிறந்தது என, கண்டறிந்து, அந்த ரகத்திற்கு பெயரிட்டு, விவசாயிகளுக்கு பல்கலைக்கழகம் அறிமுகம் செய்யும்," என்றார்.

## நான்கு இடங்களில் மானிய விலை உலர் தீவன கிடங்கு

**காஞ்சிபுரம்:** காஞ்சிபுரம் மாவட்டத்தில், நான்கு இடங்களில், கால்நடைகளுக்கு தேவையான மானிய விலை உலர் தீவனக் கிடங்குகள் திறக்கப்பட்டு உள்ளன. தமிழக அரசு, கடந்த ஆண்டு நவம்பர், 12ம் தேதி அறிவித்த மானிய விலை உலர்

தீவனக் கிடங்கு, காஞ்சிபுரம் மாவட்டத்தில், 40 லட்சம் ரூபாய் செலவில், காஞ்சிபுரம், மதுராந்தகம், செங்கல்பட்டு, சிட்லபாக்கம் ஆகிய நான்கு கோட்டங் களுக்கு உட்பட்ட அய்யம்பேட்டை, நந்திவரம், மதுராந்தகம், சிட்லப்பாக்கம் ஆகிய பகுதிகளில் உள்ள கால்நடை மருத்துவமனை மற்றும் மருந்தகத்தில் திறக்கப்பட்டுள்ளன. இதில், அப்பகுதி விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர், தங்களது கால்நடைகளுக்கு தேவையான, உலர் தீவனத்தை ஒரு கிலோ 2 ரூபாய் வீதம் பெற்றுக் கொள்ளலாம். மேலும், ஒரு கால்நடைக்கு நாள் ஒன்றுக்கு, மூன்று கிலோ வீதமும், அதிகபட்சமாக ஒரு குடும்பத்தில் உள்ள, ஐந்து கால்நடைகளுக்கு, ஒரு வாரத்திற்குத் தேவையான, உலர் தீவனம் வழங்கப்படும். இதனால், விவசாயிகள் அனைவரும் உலர் தீவனக் கிடங்கில், மானிய விலையில் தீவனங்களைப் பெற்று, பயனடையுமாறு மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

## திருந்திய நெல் சாகுபடி திட்டத்தில் மானியம்

**காஞ்சிபுரம்:** திருந்திய நெல் சாகுபடி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு, 3,000 ரூபாய் மானியம் வழங்கப்பட உள்ளது.

காஞ்சிபுரம் வேளாண் இணை இயக்குனர் சவுந்தரராஜன் கூறியதாவது: திருந்திய நெல் சாகுபடி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், தண்ணீர் வசதி உள்ள விவசாயிகளுக்கு 3,000 ரூபாய் மானியம் வழங்கப்பட உள்ளது. இந்த நிதியில், 1,500 ரூபாய் உயிர் உரங்களுக்காகவும்; 1500 ரூபாய் நடவு மானியமாகவும் வழங்கப்படும். இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள், அடையாள அட்டை; சிட்டா அடங்கல் உள்ளிட்ட ஆவணங்களுடன், அந்தந்த வட்டார வேளாண் விரிவாக்க மைய, உதவி இயக்குனர்களை அணுகலாம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## வைக்கோலுக்கு கடும் கிராக்கி

**சங்கராபுரம், பி :** சங்கராபுரம் பகுதியில் வைக்கோலுக்கு கூடுதல் விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததால் விவசாயிகள் சாகுபடி செய்யாமல்

நிலத்தை கரம்பாகவே போட்டு வைத்திருந்தனர். கடந்த ஐப்பசி மாசம் நிஷா புயல் காரணமாக பெய்த மழை யால் சில கிராம ஏரிகளுக்கு மட்டுமே சிறதளவு தண்ணீர் வந்தது. ஏரி பாசனத்தை நம்பி சில விவசாயிகள் சம்பா சாகுபடி செய்தனர். தற்போது சங்கராபுரம் பகுதியில் சம்பா சாகுபடி செய்த விவசாயிகள் நெல் அறுவடை செய்து வருகின்றனர்.

கால்நடை வைத்துள்ள விவசாயிகள் வைக்கோல் இல்லாமல் அவதிக்குள்ளாகி வருகின்றனர். சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஆத்தூர் பகுதிகளில் இருந்து லாரியுடன் அறுவடை செய்யும் நிலத் திற்கு வந்து வைக்கோலை வெளியூர் நபர்கள் வாங்கிச் செல்கின்றனர்.

கடந்த ஆண்டு ஒரு டிராக்டர் லோடு வைக் கோல் 5 ஆயிரம் ருபாய்க்கு விற்றது. தற்போது அதே ஒரு லோடு டிராக்டர் வைக் கோல் 7 ஆயிரம் ருபாய்க்கு விற்கப்படுவதால் விவசாயிகளுக்கு கூடுதல் லாபம் கிடைக்கிறது.இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## அதிக விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி : பருத்தி பயிர் செய்வதில் அதிக ஆர்வம்

**சங்கராபுரம் :** சங்கராபுரம் பகுதியில் கூடுதல் விலை கிடைப்பதால் பருத்தி சாகுபடி செய்வதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கரும்பு பயிர் செய்வதில் தற்போது கூலி உயர்வு, வாகன வாடகை, மின் தட்டுப்பாடு, தண் ணீர் பற்றாக் குறை, கட்டிங் ஆர்டர் கிடைப்பதில் சிரமம் போன்ற காரணங்களால் சங்கராபுரம் பகுதி விவசாயிகள் அவதிக்குள்ளாகி வந்தனர்.

## தென்னை நகரத்தில் இளநீர் விலை உயர்வு

**பொள்ளாச்சி :** வரத்து குறைந்ததால், தேங்காய் மற்றும் இளநீர் விலையிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது; மேலும், தென்னை மட்டை விலையும் கிடு...கிடு..வென உயர்ந்துள்ளது.

பொள்ளாச்சி மற்றும் சுற்றுப்பகுதிகளில், தென்னை சாகுபடி அதிகளவு உள்ளது.

இப்பகுதியில் இருந்து, உள்ளூர் மட்டுமின்றி, வெளியூர், வெளி மாநிலங்களுக்கும் தேங்காய் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதில், அதிகளவு தேங்காய் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தென்னை அதிகளவு பயிரிடப்படுவதால், பதப்படுத்தப்பட்டு, இளநீர் 'பாலித்தீன் பாக்கெட்டு'களில் விற்பனை செய்யப்படுகிறது.இதைச் சார்ந்த, தென்னை நார் உற்பத்தி போன்ற தொழில்களும் நடைபெற்று வருகின்றன.

போதிய மழையில்லாததால், கடந்தாண்டு வறட்சியால், தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டன. இதனால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.

இந்நிலையில், கடந்த சில மாதங்களாக தேங்காய்க்கு விலை கிடைத்து வருகிறது. தேங்காய் வரத்து குறைவு போன்ற காரணங்களினால் விலை கிடு...கிடு...வென உயர்ந்து வருகிறது.

தேங்காய்

பொள்ளாச்சி மார்க்கெட் பகுதியில், தேங்காய் வரத்து குறைந்துள்ளது. அதிலும், முதல்தர தேங்காய் முற்றிலும் குறைந்துள்ளது. தற்போது, இரண்டாம் தரமான பச்சைக்காய் வரத்து மட்டுமே உள்ளது.இது, காங்கேயம் மார்க்கெட் நிலவரப்படி, இரண்டாம் தரம் (பச்சைக்காய்) ஒரு டன் ரூ. 16,17 ஆயிரத்திற்கும் விற்பனை செய்யப்பட்டது. தேங்காய் விலை கிடு...கிடு...வென உயர்ந்துள்ளது.

இளநீர்

பொள்ளாச்சி மற்றும் சுற்றுப்புற கிராமங்களிலிருந்து விற்பனைக்காக, இளநீர் கொண்டு வரப்படுகிறது. இதன் வரத்தும் தற்போது, குறைந்துள்ளதால், விலையும் உயர்ந்துள்ளன. தேங்காய்க்கு நல்ல விலை உள்ளதால், இளநீர் போடுவது குறைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

இதனால், பொள்ளாச்சி பகுதியில், இளநீர் 25 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. பொள்ளாச்சி பகுதியிலேயே விலை உயர்ந்துள்ளதால், மற்ற பகுதியில் அதன் விலை மேலும் உயரக்கூடிய வாய்ப்புள்ளது.

மட்டையும் உயருது

தென்னை மட்டை பற்றாக்குறை உள்ளதால், அதன் விலையும் கிடு..கிடு..வென உயர்ந்துள்ளது. தென்னை பச்சை மட்டை 1,800 ரூபாயிலிருந்தும்; கருப்பு மட்டை

1,700 ரூபாயிலிருந்தும் விற்பனை செய்யப்படுகிறது. மட்டை வரத்து முற்றிலும் இல்லாததால், தென்னை நார் தொழில் பாதிக்கும் சூழல் உள்ளது.
'தேங்காய் வரத்து அதிகரித்தால் மட்டுமே விலை குறைய வாய்ப்புள்ளது; தற்போது, கேரளா சீசன் துவங்க உள்ள நிலையில், விலையில் மாற்றம் ஏற்பட கூடிய வாய்ப்புள்ளதாகவும்,' வியாபாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

### சர்க்கரை ஆலையில் பதிவு செய்ய கரும்பு விவசாயிகளுக்கு அவகாசம் நீட்டிப்பு

**திருவாலங்காடு:** "கூட்டுறவு சர்க்கரை ஆலையில், பதிவு செய்யாத விவசாயிகள், வரும், 28ம் தேதிக்குள் கரும்புகளை பதிவு செய்ய வேண்டும்" என, ஆலை தலைவர் தெரிவித்தார்.
திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை, திருவாலங்காட்டில் இயங்கி வருகிறது. மொத்தம், 2,725 கரும்பு விவசாயிகள் ஏற்கனவே பதிவு செய்து, கடந்த ஆண்டு அக்.,4ம் தேதி முதல், ஆலைக்கு கரும்புகளை அனுப்பி வருகின்றனர். மேலும், கடந்த டிசம்பர் மாதம், ஆலை நிர்வாகம், பதிவு செய்யாத விவசாயிகளும், அந்தந்த பகுதியில் உள்ள கரும்பு அலுவலகத்தில் புதியதாக பதிவு செய்து ஆலைக்கு அனுப்பலாம் என, அறிவித்தது. அதன்படி, நேற்று முன்தினம் வரை, புதியதாக, 36 விவசாயிகள் பதிவு செய்துள்ளனர். மேலும் விவசாயிகளுக்கு கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து கூட்டுறவு சர்க்கரை ஆலை யின் தலைவர் எத்திராஜ் கூறியதாவது: கரும்பு வருகை பொறுத்து தான், அடுத்த மாதத்தில் இந்தாண்டிற்கான அரவை நிறுத்தம் செய்யப்படும். விவசாயிகள் நலன் கருதி, ஆலையில் இதுவரை பதிவு செய்யாத கரும்பு விவசாயிகள், இம்மாதம், 28ம் தேதிக்குள் வட்டார கரும்பு அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். அதற்கு மேல் பதிவு செய்ய வரும் விவசாயிகளின் கரும்புகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டது. இவ்வாறு அவர் கூறினார்.

### திருந்திய நெல் சாகுபடிக்கு ஊக்கத்தொகை

**ஆர்.கே.பேட்டை:** விவசாய கூலியாட்கள் பற்றாக்குறையை போக்கும் விதமாக, நெல் சாகுபடியில் திருந்திய முறை கையாளப்பட்டு வருகிறது. இதன் மூலம், நாற்று

பறித்தல், நடவு, களை பறித்தல் மற்றும் அறுவடை உள்ளிட்ட பணிகள் இயந்திரம் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இதன்படி,திருந்திய நெல் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு, ஏக்கருக்கு, 3,000 ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. ஆர்.கே.பேட்டை ஒன்றியத் தில், 17,955 விவசாயிகள் உள்ளனர். தற்போது, நவரை பருவத்தில், 150 ஹெக்டேரில் நெல் பயிரிட இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. திருந்திய நெல் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு, ஒரு ஏக்கருக்கு, 1,500 ரூபாய் மதிப்பிலான இடுபொருட்களும், பராமரிப்பு செலவுக்கு 1,500 காசோலையாகவும் வழங்கப்படும் என, ஆர்.கே.பேட்டை வேளாண் விரிவாக்க மையம் தகவல் வெளியிட்டுள்ளது.

## உற்பத்தி குறைவால் தேங்காய் விலை உயர்வு

**ப.வேலூர்:** வரத்து குறைவால், மும்பாய் மார்க்கெட்டில் தேங்காய் விற்பனை அதிகரித்துள்ளது.

ப.வேலூர், பிலிக்கல்பாளையம், கொளக்காட்டுப்புதூர், கபிலர்மலை, ஜேடர்பாளையம், நன்செய் இடையாறு, பொய்யேரி, ஓலப்பாளையம், குப்புச்சிபாளையம் உள்ளிட்ட காவிரி கரையோரப் பகுதிகளில், 5,000 ஏக்கர் பரப்பளவில் தென்னை மரம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

இப்பகுதியில், 30க்கும் மேற்பட்ட ஏல மண்டிகள் செயல்படுகிறது. அறுவடை செய்யப்படும் தேங்காய்கள், ஏல மண்டிக்கு கொண்டுவரப்பட்டு, தரம் பிரித்து, லாரிகளில், மும்பாய் மார்க்கெட்டுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

போதிய தண்ணீரின்றி தேங்காய் உற்பத்தி குறைந்ததால், தினமும், பத்து முதல், 15 லாரிகளில் ஏற்றிச் சென்ற லோடு, தற்போது, மூன்று முதல், ஐந்து லாரிகளாக குறைந்துள்ளது. ஒரு லாரியில், பெரிய தேங்காய், 40 ஆயிரமும், சிறிய தேங்காய், 45 ஆயிரமும் லோடு செய்யப்படுகிறது. மேலும், மும்பாய் மார்க்கெட்டில், ஒரு தேங்காய், 13.70 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. உற்பத்தி குறைந்துள்ளதால், தேங்காய் விலை அதிகரித்துள்ளது, இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## சுய உதவிக்குழுவுக்கு லாபம் தரும் வணிக வாய்ப்புகள்

**உடுமலை :** 'சுய உதவிக்குழுவை சேர்ந்தவர்கள் தங்கள் வீட்டின் அருகில் உள்ள சிறிய இடத்தில் பாத்தி கட்டியோ அல்லது சிறு தொட்டிகளிலோ காளான், கீரை வகைகளை வளர்த்து, குழுவாக விற்பனை செய்து, லாபம் ஈட்டலாம்,' என, தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் (உடுமலை வட்டம்) இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

திருப்பூர், அனுப்பர்பாளையத்தில் உள்ள கனரா வங்கியின் பயிற்சி மையம் மூலம் பல்வேறு சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. தொழில்முனைவோர் சுய உதவிக்குழு மூலமாக எந்த தொழில் துவக்கினாலும், இம்மையம் சார்பில், தொழில் நுட்ப உதவி வழங்கப்பட்டு வருகிறது. குழுவில் உள்ள பெண்கள் தங்கள் பகுதியில் உள்ள தேவைகளை பூர்த்தி செய்து அன்றாட வரவைப் பெருக்க வழி உள்ளது.

வேளாண் தொழிலுக்கு ஆதாரமாக உள்ள பொருட்கள், நகர்ப்புற தேவைக்கு உதவும் மதிப்புக் கூட்டும் பொருட்கள், அலங்காரப் பொருட்கள் தயாரிப்பு, மூங்கில் சார்புடைய தொழில்கள், பழங்கள் மற்றும் காய்கறிகளை பதப்படுத்தி விற்பனை செய்தல், குத்தகை முறையில் மொத்தக் கொள்முதல் மற்றும் சில்லரை விற்பனை மூலம் பல்வேறு பகுதிகளின் தேவையை பூர்த்தி செய்தல் போன்ற தொழில்கள் உள்ளன.மேலும், வீட்டுக்கு அருகில் உள்ள சிறிய இடத்தில் மண்புழு உர தயாரிப்பு, கன்றுகள் உற்பத்தி, காளான் குடில் அமைத்தல், பல அடுக்கு கீரைகள், கறிவேப்பிலை, புதினா, முருங்கை, அகத்தி ஆகியவற்றை சிறு பாத்தி அல்லது தொட்டியில் வளர்த்து குழுவாக விற்பனை செய்யலாம்.பயிர் பாதுகாப்புக்கு உதவும் தெளிப்பான்கள் மூலம், ஒப்பந்த அடிப்படையில், விவசாயிகளுக்கு உதவலாம். பஞ்ச கவ்யா, வேப்பம்புண்ணாக்கு ஆகியவற்றை தயாரித்து விவசாயிகளின் தேவையை பூர்த்தி செய்யலாம். தென்னை மரம் ஏறும் கருவி மூலம் தேங்காய் சேகரம், எலி மருந்து வைத்தல் உள்ளிட்ட தொழில்களை மேற்கொள்ளலாம். இவை அனைத்துமே லாபம் தரும் வணிக வாய்ப்புகள்தான். மேலும் விவரங்களுக்கு, 98420 07125 என்ற மொபைல் எண்ணை தொடர்பு

கொள்ளலாம்.

இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒரு வாழை இலை ஆறு ரூபாய்

**திருப்பூர் :** முகூர்த்த தினங்கள் தொடர்ந்து வருவதால், வாழை இலை விலை திடீரென உச்சத்தை தொட்டுள்ளது; விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். எந்த ஆண்டும் இல்லாத சிறப்பாக, இம்மாதத்தில் ஒன்பது முகூர்த்த தினங்கள் வந்துள்ளன. திருமண வைபவங்கள் உட்பட பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்து வருகின்றன. குறிப்பாக, கடந்த 9 மற்றும் 10ம் தேதி முகூர்த்த தினம்; இன்றும், நாளையும் முகூர்த்தம். ஒரு வாரத்தில் நான்கு நாட்கள் முகூர்த்தம் என்பதால், வாழை இலைக்கு மவுசு கூடியுள்ளது. கடந்த வாரம் 2.50க்கு விற்கப்பட்ட ஒரு டிபன் இலை, நேற்று நான்கு ரூபாய் விற்கப்பட்டது. தலை வாழை (பெரிய) இலை நான்கு ரூபாயாக இருந்தது, ஆறு ரூபாயாகியது. ஓட்டல்களுக்கு இரண்டாம் தர டிபன் இலை மூன்று ரூபாய் முதல் விற்பனை செய்யப்படுகிறது. தினசரி மார்க்கெட் இலை வியாபாரி ஒருவர் கூறுகையில், "முகூர்த்த தினம் என்பது ஒரு காரணமாக இருந்தாலும், விளைச்சல் குறைவால் வாழை இலை வருவதே குறைவாக உள்ளது. குளம், குட்டை, கிணறு வற்றி தண்ணீரில்லாமல் இருக்கிறது. மழையை நம்பி வாழையை பயிரிட விவசாயிகள் தயங்குகின்றனர். கோவை மாவட்டத்தின் சில பகுதிகளில் இருந்து மட்டுமே வாழை இலை வருகிறது. ஒரு நாளைக்கு 200 கட்டு இலை வந்து கொண்டிருந்தது. தற்போது, 150 முதல் 160 கட்டு மட்டுமே வருகிறது. அவற்றை வாங்குவதிலும் போட்டி நிலவுகிறது,' என்றார். தலை வாழை இலை ஒன்றின் விலை ஆறு ரூபாயை தொட்டுள்ளதால், விசேஷ நிகழ்ச்சி நடத்துவோர் கலங்கியுள்ளனர். அதே சமயம், பல ஆண்டுகளுக்குபின், நல்ல லாபம் கிடைப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## மானியத்தில் வைக்கோல் வழங்கும் திட்டம்; விண்ணப்பிக்க விவசாயிகளுக்கு அழைப்பு

**திருச்சி:** "திருச்சி மாவட்டத்தில், கால்நடை பராமரிப்பு துறை மூலம், வறட்சி நிவாரணத் திட்டத்தில், கால்நடைகளுக்கு ஒரு கிலோ, இரண்டு ரூபாய் வீதம் மானிய விலையில், வைக்கோல் வழங்க விண்ணப்பப் புள்ளிகள் வரவேற்கப்படுகிறது' என திருச்சி கலெக்டர் ஜெயஸ்ரீ தெரிவித்துள்ளார்.

கலெக்டர் ஜெயஸ்ரீ அறிக்கை:

தமிழக முதல்வர் ஜெயலலிதா, கால்நடை வளர்ப்போர் நலன் கருதி, கால்நடைகளுக்கு உலர் வைக்கோல் தீவனத்தை மானிய விலையில் வழங்க, 12.50 கோடி ரூபாய் முதல் கட்டமாக அனைத்து மாவட்டங்களுக்கும் ஒதுக்கி உள்ளார். அதன்படி, ஒரு கிலோ வைக்கோல், இரண்டு ரூபாய் என்ற மானிய விலையில், ஒரு மாட்டுக்கு ஒரு நாளைக்கு, மூன்று கிலோ வீதம் அதிகபட்சம், ஐந்து மாடுகளுக்கு வாராந்திர தேவையின் அடிப்படையில், வாரம் ஒரு முறை தொடர்ச்சியாக, இரண்டு முதல், மூன்று மாதங்களுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

கால்நடை வளர்ப்போர், ரேஷன் கார்டு நகல், பாஸ்போர்ட் சைஸ் ஃபோட்டோ இரண்டு, கால்நடைகளின் இருப்பு விவரம் ஆகியவற்றை அருகில் உள்ள அரசு கால்நடை மருந்தகங்களில் கொடுத்து, பதிவு செய்து கொள்ள வேண்டும். பதிவு செய்தவர்களுக்கு, விரைவில், "கால்நடை தீவனம் வழங்கும் அட்டை' வழங்கப்படும். அட்டை வைத்திருந்தால் மட்டுமே இத்திட்டத்தில் பயன்பெற முடியும்.

இத்திட்டத்தின்படி, மணிகண்டம் கால்நடை மருந்தகத்திலும், மருங்காபுரி யூனியனில், வளநாடு கால்நடை மருந்தக வளாகத்திலும், மண்ணச்சநல்லூர் யூனியன் கால்நடை மருந்தகத்திலும் மற்றும் முசிறி யூனியன் தண்டலைப்புதூர் கால்நடை மருந்தக வளாகத்திலும், நான்கு உலர் தீவன கிடங்குகள் அமைக்க, 40 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நான்கு கிடங்குகளுக்கும் தனித்தனியாக உலர்ந்த வைக்கோல் வாங்கி, கட்டுகளாக கட்டி, வண்டியில் ஏற்றி குறிப்பிட்ட இடங்களில் இறக்கி, அடுக்கி போர் போட்டுத் தந்து வாரம், 10 டன் வீதம் தொடர்ந்து, இரண்டு முதல் மூன்று

மாதங்களுக்கு வழங்க விருப்பம் உள்ளவர்கள், ஒரு கிலோ வைக்கோல் விலையை குறிப்பிட்டு, மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளியை கொடுக்கலாம். இத்திட்டத்துக்கு சப்ளை செய்யப்படும் வைக்கோல் ஈரமில்லாததாக இருக்க வேண்டும். பூசனம் பிடித்து மக்கிப் போனதாக இருக்கக் கூடாது. தரம் இல்லாத வைக்கோல் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மேலும், வழங்கல் ஆணை பெற்ற விவசாயிகள், 10 நாட்களுக்குள் வினியோகத்தை துவங்க வேண்டும்.
நிபந்னைகளை ஏற்றுக்கொண்டு வைக்கோல் விநியோகம் செய்ய விரும்பும் விவசாயிகள், வரும், 12ம் தேதி பிற்பகல், 5 மணி வரை, மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளியை, திருச்சி கால்நடை பராமரிப்புத்துறை, மண்டல இணை இயக்குனர் அலுவலகம், கோழிப்பண்ணை வளாகம், புதுக்கோட்டை மெயின்ரோடு, திருச்சி-23 என்று முகவரியில் உள்ள அலுவலகத்தில், "வைக்கோல் விலைப்புள்ளி' பெட்டியிலோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்க வேண்டும்.
பெறப்பட்ட விலைப்புள்ளிகள், 14ம் தேதி மாலை, 4.30 மணிக்கு, மாவட்ட வைக்கோல் கமிட்டி உறுப்பினர்கள், விலைபுள்ளியை அனுப்பியவர்கள் கலந்து கொள்ளும் கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் முன்னிலையில் திறக்கப்பட்டு, குறைந்த விலைப்புள்ளி கோரியவர்களுக்கு வழங்கல் ஆணைகள் வழங்கப்படும்.
மேலும், விவரங்களுக்கு கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனரை, 0431-2333344 என்ற டெலிஃபோன் எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.
இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## நாளை முதல் ஒருமாதம்

### கடலுக்கு செல்வதை தவிர்க்க மீனவர்கள் முடிவு



**மணமேல்குடி :** இலங்கை-தமிழக மீனவர்களிடையே நடந்த பேச்சுவார்த்தையில் ஒருமாதத்துக்கு எல்லை தாண்டவேண்டாம் என இலங்கை மீனவர்கள் விதித்த நிபந்தனைக்காக நாளை 13ம் தேதி முதல் மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க போவதில்லை என நாகை, புதுக்கோட்டை உள்பட 6 மாவட்ட மீனவர்கள் சங்க ஆலோசனை கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டுள்ளது.தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் அடிக்கடி தாக்கி சிறை பிடிப்பதை தடுக்க இருநாட்டு மீனவர்களுக்கு இடையே பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. சென்னையில் கடந்த மாதம் 27ம் தேதி தமிழக-இலங்கை மீனவ பிரதிநிதிகள் இடையே பேச்சு வார்த்தை நடந்தது. 8 மணி நேரம் பரபரப்பாக நடந்த பேச்சுவார்த்தையில் எடுக்கப்பட்ட முடிவுகள், இருநாட்டு தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு அதன்பிறகுதான் நல்ல முடிவு எடுக்கப்படும்‘ என

இருநாட்டு மீனவ பிரதிநிதிகளும் தெரிவித்தனர்.
தமிழக மீனவர்களை இலங்கைக்கு அழைத்து 2ம் கட்ட பேச்சுவார்த்தை நடைபெற உள்ளது. இதற்கு இலங்கை மீனவர்கள் 45 நாட்கள் அவகாசம் கேட்டுள்ளனர். இந்த காலகட்டத்தில், தமிழக மீனவர்கள் யாரும் எல்லை தாண்டி வரக்கூடாது. இரட்டை மடி, சுருக்குமடி வலைகளை பயன்படுத்தக்கூடாது. அதற்காக மீன்பிடிக்காமல் இருக்கவேண்டாம் என்று தமிழக மீனவர்களுக்கு இலங்கை மீனவர்கள் நிபந்தனை விதித்துள்ளனர்.இதற்கிடையே இலங்கையில் சிறைவைக்கப்பட்ட அனைத்து மீனவர்களும், அவர்களது படகுகளும் விடுவிக்கப்பட்டது. தற்போது எல்லை தாண்டியதாக ராமேஸ்வரம், புதுக்கோட்டை, வேளாங்கண்ணி மீனவர்கள் 50க்கும் மேற்பட்டோர் மீண்டும் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர். இதை தடுக்கவும், இலங்கை மீனவர்களின் நிபந்தனைபடி ஒருமாதம் எல்லைதாண்டாமல் இருப்பது தொடர்பாக முடிவுவெடுக்க புதுக்கோட்டை, தஞ்சாவூர், காரைக்கால், நாகை, திருவாரூர், ராமநாதபுரம் ஆகிய 6 மாவட்ட மீனவ பிரதிநிதிகள் கலந்துகொண்ட ஆலோசனை கூட்டம் புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாபட்டினம் ரேணுகா பரமேஸ்வரி கோயிலில் நேற்றுமுன்தினம் மாலை நடந்தது.
ஒருமணிநேரம் நடந்த இந்த கூட்டத்தில், ராமேஸ்வரம் விசைபடகு மீனவர் சங்க தலைவர்கள் ஜேசு, போஸ், தஞ்சை தாஜுதீன், நாகை வீரமுத்து உள்பட 30க்கும் மேற்பட்ட மீனவ சங்க பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.இதில் ராமேஸ்வரம் போஸ் பேசுகையில், ராமேஸ்வரம் கடற்பகுதியில் எல்லை குறுகலானது. அதனால் மீனவர்கள் வேறு வழியின்றி செல்லவேண்டிய நிலை உள்ளது. இதனால் மீனவர்கள் எல்லை தாண்டுவதாக சிறைபிடிக்கப்படுகின்றனர். இதற்கு ஒரே வழி ஒருமாதம் வரை ராமேஸ்வரம் மீனவர்கள் கடலுக்கு போகாமல் இருக்கவேண்டும் என்றார்.இதற்கு மற்ற மாவட்ட மீனவர்களும் ஆதரவு தெரிவித்ததுடன், தங்களது மாவட்ட மீனவர்களுடன் கலந்துபேசி ஒருமாதம் கடலுக்கு போகாமல் இருக்க முடிவு செய்வதாக நாகை, காரைக்கால், தஞ்சை, திருவாரூர் மாவட்ட மீனவ பிரதிநிதிகள் தெரிவித்தனர்.இதையடுத்து, கடலில் தடைவிதிக்கப்பட்டுள்ள சுருக்குமடி வலை, இரட்டைமடி வலை பயன்படுத்தப்போவதில்லை. நாளை 13ம்

தேதி முதல் ஒருமாதம் வரை கடலுக்கு செல்லபோவதில்லை என கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இலங்கை கடற்படை அட்டகாசம்

ராமேஸ்வரம்: ராமேஸ்வரத்திலிருந்து 570க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் நேற்று முன்தினம் காலை கடலுக்கு சென்றனர். இதில் நூற்றுக்கும் மேற்பட்ட படகுகள் நேற்று முன்தினம் மாலை கச்சத்தீவு கடல் பகுதியில் வழக்கம் போல் மீன் பிடித்துக் கொண்டிருந்தன. அப்போது அங்கு ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் 10க்கும் மேற்பட்ட விசைப்படகுகளை மறித்து மீன்பிடி வலைகளை வெட்டி கடலில் வீசியுள்ளனர். பின்னர் இப்பகுதியில் மீன் பிடிக்கக் கூடாது என அவர்கள், மீனவர்களை விரட்டியடித்தனர்.

**7,000 மூட்டை பருத்தி ரூ.1.75 கோடிக்கு ஏலம்**



**இடைப்பாடி:** இடைப்பாடியில் 7000 மூட்டை பருத்தி ரூ.1 கோடியே 75 லட்சத்துக்கு நேற்று விற்பனையானது. சேலம் மாவட்டம், இடைப்பாடியில் சேலம் வேளாண்மை கூட்டுறவு உற்பத்தியாளர்கள் விற்பனை சங்க கிளையில் நேற்று பருத்தி ஏலம்நடைபெற்றது. நேற்றைய ஏலத்தில் சேலம், நாமக்கல், ஈரோடு, திருப்பத்தூர், திருவண்ணாமலை மற்றும் இடைப்பாடி சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த 750க்கும் மேற்பட்ட விவசாயிகள், வியாபாரிகள் கலந்து கொண்டனர். இதில், சுமார் 7000 மூட்டை பருத்தி விற்பனைக்கு வந்திருந்தது. இது ரூ. 1 கோடியே 75 லட்சத்திற்கு ஏலம் போனது. டிடி ரக பருத்தி குவிண்டால் ரூ.4950 முதல் ரூ.5869 வரையும், டிசிஎச் ரகம் முதல் தரம் ரூ.6900 முதல் ரூ.7701 வரையும்,

அதில் 2ம் தரம் ரூ. 6300 முதல் ரூ. 6800 வரை ஏலம்போனது. தற்போது வெளி மாவட்டங்களில் இருந்து பருத்தி வரத்து அதிகரித்துள்ளதால் மீண்டும் ஏலம் வரும் 14ம் தேதி நடைபெறும்.

**நடப்பு ஆண்டில் ரூ.4 கோடி வரை நஷ்டம் பருவமழை கைவிட்டதால் கருகியது காபி பயிர்**



**கொடைக்கானல்:** கொடைக்கானல் கீழ்மலைப் பகுதியில் பருவமழை குறைந்துள்ளதால் காபி விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட் டுள்ளது. நடப்பாண்டில் ^4 கோடி வரையில் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கண்ணீர் வடிக்கின்றனர்.கொடைக்கானல் கீழ்மலைப் பகுதியில் தாண்டிக்குடி, பண்ணைக்காடு, மங்களங்கொம்பு, பாச்சலூர், பூலத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 25 ஆயிரம் ஏக்கரில் காபி விவசாயம் நடந்தது. போதிய மழையின்மை, உரம் விலையேற்றம், கூலி உயர்வு, வனவிலங்குகள் தொல்லையால் காப்பி விவசாய பரப்பு சுமார் 10 ஆயிரம் ஏக்கராக குறைந்துவிட்டது.கொடைக்கானல் கீழ்மலைப் பகுதிகளில் ஆண்டுதோறும் 2000 மி.மீ. மழை பதிவாகும். காபி விளைச்ச லுக்கு 1,500 மி.மீ. மழை போதுமானதாகும். கடந்த சில ஆண்டுகளாக மழை அளவு குறைந்து வருகிறது. 2013ம் ஆண்டு 890 மி.மீ. மழை மட்டுமே பதிவானது. இதனால் காபிவிளைச்சல் 30%ஆக சரிந்தது.மழையளவு நன்றாக இருந்த ஆண்டுகளில் கீழ்மலைப் பகுதியில் மட்டும் ஆண்டுக்கு 3 ஆயிரம் டன் காப்பி உற்பத்தியாகும். நடப்பாண்டு 500 டன் காப்பி மட்டுமே விளைந்துள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கிலோ காப்பி 100 முதல் 150 விலை போனது.

நடப்பாண்டு ஒரு கிலோ காபி 70 முதல் 90 வரையே விற்பனையாகிறது. இதனால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது.இதுகுறித்து கீழ்மலை விவசாயிகள் சங்க தலைவர் கோவிந்தசாமி கூறுகையில் ''கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு கீழ்மலைப் பகுதியில் 3 இடங்களில் காபி வாரியம் சார்பில் ஆலோசனை மையம் செயல்பட்டு வந்தது. அங்கு விவசாயிகளுக்கு போதுமான ஆலோசனை வழங்கப்பட்டது. 3 மாதங்களுக்கு ஒரு முறை கூட்டம் நடத்துவர். அப்போது விவசாயிகள் தங்கள் குறைகளை தெரிவிக்க வாய்ப்பாக இருந்தது. கடந்த 10 ஆண்டுகளாக இந்த நடைமுறைகள் மேற்கொள்ளப்படுவதில்லை. 6 ஆண்டுக்கு ஒரு முறை காபி வாரியம் விலை நிர்ணயம் செய்யும். இந்த நடைமுறையும் தற்போது பின்பற்றப்படுவதில்லை. தொடர்ந்து வறட்சி நிலவுவதால் காபி விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டு காபி விவசாயிகளுக்கு ^4 கோடி வரையில் நஷ்டம் ஏற்பட்டுள்ளதுÕ என்றார். நடப்பாண்டு மழை குறைவால் கொடைக்கானல் பகுதியில் விளைந்துள்ள காப்பி தரம் குறைந்ததாக உள்ளது. இவற்றை அதிக விலை கொடுத்து வாங்க காப்பி நிறுவனங்கள் முன்வராததால் விலை குறைந்துள்ளது.

**முட்டைக்கோஸ் விலை வீழ்ச்சி**



**சத்தியமங்கலம்:** தாளவாடி மலைப்பகுதி கடல் மட்டத்திலிருந்து சுமார் 2500 அடி உயரத்தில் உள்ளதால் அங்கு குளிர்ந்த தட்ப வெப்பநிலை நிலவுகிறது. இதனால், இப்பகுதி விவசாயிகள் உருளைக்கிழங்கு, கேரட், பீன்ஸ், முள்ளங்கி, முட்டைகோஸ், பீட்ருட் பயிரிடுகின் றனர். இங்கு விளையும் காய்கறிகள்

மேட்டுப்பாளையம், கோவை, ஈரோடு, திருப்பூர் மற்றும் கேரள மாநிலங்களுக்கு விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது. தற்போது முட்டைகோஸை விவசாயிகளிடமிருந்து கிலோ ரூ.2க்கு வியாபாரிகள் வாங்கிச் செல்வதால் விவசாயிகள் அதிர்ச் சியடைந்துள்ளனர். இதுகுறித்து விவசாயி ஒருவர் கூறுகையில், 'முட்டைகோஸ் 3 மாத கால பயிராகும். ஒரு ஏக்கருக்கு 25 ஆயிரம் முதல் 30 ஆயிரம் நாற்று நடவு செய்யப்படுகிறது. உழவுக்கூலி, நடவுப்பணி, களையெடுத்தல், பூச்சிமருந்து தெளித்தல், உரமிடுதல் உள்ளிட்ட பணிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம் செலவாகிறது. கடந்த ஆண்டு ஒரு கிலோ ரூ.10 முதல் 15 வரை விற்பனையானது. இதனால் விவசாயிகளுக்கு ஓரளவு லாபம் கிடைத்தது. தற்போது வியாபாரிகள் ஒரு கிலோ முட்டைகோஸை ரூ.2க்கு வாங்கிச் செல்கின்றனர். இதனால் முட்டைகோஸ் பயிரிட்டுள்ள விவசாயிகள் செலவினதொகையை கூட ஈட்ட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் தாளவாடி மலைப்பகுதி விவசாயிகள் மிகுந்த கவலையில் உள்ளனர்' என்றார்.

**மூலிகை பரப்பை அதிகரிக்க 75 சதவீதம் மானியம்**

தோட்டக்கலைத்துறை தேசிய மூலிகை பயிர் இயக்கம் சார்பில் மூலிகை பயிர்களின் சாகுபடி பரப்பை விரிவுபடுத்துவதற்கு 20 முதல் 75 சதவீதம் வரையில் மானியம் அளிக்கப்படுகிறது. இதே போல் 50 சதவீத மானியத்தில் முக்கிய பழமரங்கள், மலர்கள், வாசனை பயிர்கள், பரப்பை விரிவாக்க திட்டம், பசுமை கூடாரம் அமைக்கும் திட்டம், மண்புழு உரக்கூடம் அமைக்கும் ஆகியவை செயல்படுத்தப்படுகிறது.

விதிமுறைகள்: அனைத்து விவசாயிகளும் பயன்பெறலாம். சிட்டா, அடங்கல், நிலத்தின் வரைபடம் போன்வற்றை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: சம்பந்தப்பட்ட தோட்டக்கலை அலுவலர், வட்டார அளவிலான தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்கள், மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர், தோட்டக்கலைத்துறை, திண்டுக்கல் ஆகிய முகவரிக்கோ **(0451) 2460522** என்ற எண்ணிற்கோ தொடர்பு கொள்ளலாம்.

**திருப்புவனம் அருகே பண்ணை குட்டை பணி ஆய்வு**

**திருப்புவனம், :**திருப்புவனம் அருகே கொந்தகை ஊராட்சியில் பண்ணைகுட்டை அமைக்கும் பணியை தமிழ்நாடு நீர்வடி மேம்பாட்டு முகமையின் செயல் இயக்குநர் சுரேஷ்குமார் ஆய்வு செய்தார்.

அப்போது மழைநீர் சேகரிப்பு மையம் அமைக்க வலியுறுத்தினார். பீசர்பட்டினம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மாதிரி பண்ணை குட்டையை பார்வையிட்டார். பண்ணை குட்டையில் விவசாயிகள் மீன் வளர்த்து லாபம் ஈட்டுவதாகவும், மீதி தண்ணீரில் கேழ்வரகு போன்ற பயிர்கள் சாகுபடி செய்வதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

ஆய்வின் போது, வேளான் இணை இயக்குநர் செல்லதுரை, துணை இயக்குநர் முகமது இக்பால், உதவி செயற்பொறியாளர் ஈஸ்வரன், நீர்வடி பகுதி சங்க தலைவர் கருப்புசாமி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**வரத்து குறைவால் மாதுளை விலை உயர்வு**

**சேலம், :**வரத்து குறைவால் மாதுளை விலை கடந்த 15 நாட்களில் கிலோவிற்கு ரூ20வரை உயர்ந்துள்ளது.

மகாராஷ்டிரா மாநிலம் சாங்லி, மிரச் ஆகிய இடங்களில் மாதுளை அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கிருந்து லாரிகள் மூலம் தினமும் சேலம் மார்கெட்டிற்கு மாதுளை விற்பனைக்கு வருகிறது. தற்போது சேலம் மார்கெட்டிற்கு நாளொன்றுக்கு 10 டன் மாதுளை விற்பனைக்கு வருகிறது. வரத்து குறைவால் மாதுளை விலை கிலோவிற்கு ரூ20வரை அதிகரித்துள்ளது.கடந்த பதினைந்து நாட்களுக்கு முன் கிலோரூ140வரை விற்பனை செய்யப்பட்ட மாதுளை, தற்போது கிலோரூ160வரை விற் பனை செய்யப்படுகிறது.

இது குறித்து வியாபாரிகள் கூறுகையில், வரத்து குறைவால் மாதுளை விலை அதிகரித்துள்ளது. இந்த விலை உயர்வு விற்பனையை பாதிக்கவில்லை என்றனர்.

**போலி நாற்றுகளை வாங்கி ஏமாற வேண்டாம் அதிகாரி வேண்டுகோள்**

**திருப்பூர், :** பொங்க லூர் பகுதியில் விவசாயிகள் போலி நாற்றுகளை வாங்கி ஏமாற வேண்டாம் என்று கோவை விதை ஆய்வு துணை இயக்குனர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கோவை விதை ஆய்வு துணை இயக்குனர் பொன்னுசாமி நடேசன் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் கூறியிருப்பதாவது: பொங்கலூர் மற்றும் பல்ல டம் சுற்று வட்டார பகுதிகளில் அதிகளவில் காய்கறி சாகுபடி நடைபெற்று வருகிறது. மேலும், காய்கறி சாகுபடியில் அதிக லாபம் இருப்பதால் விவசாயிகள் காய்கறி விதைகளை தனி யார்மற்றும் கூட்டுறவு துறை நிறுவனங்களிடம் வாங்கி பயன்படுத்தி வருகிறார்கள்.

அவ்வாறு வாங்கும் போது, விதை விற்பனை நிலையங்கள் விதை உற்பத்திக்கான உரிமம் பெற்றுள்ளதாஎன பார்த்து வாங்க வேண்டும். மேலும் விதை பாக்கெட்டில் விதையின் பெயர், ரகம், முளைப்புத்திறன், காலாவதி தேதி ஆகியவற்றையும் பார்த்து வாங்க வேண்டும்.

அதுபோல் விற்பனை பட்டியலில் பெயர்,முகவரி, விதையின் பெயர், ரகம், காலாவதி நாள் மற்றும் குவியல் எண் ஆகியவை சரியாக இருக்கிறதா என சரிபார்த்து வாங்கவேண் டும். தற்போது சில விவசாயிகள் நடவு பணிக்கு நாற்றுகளை வாங்கி பயன்படுத்தி வருகிறார்கள். எனவே நாற்றுகளின் தேவையும் அதிகரித்து வருகிறது.

நாற்று விற்பனை செய் யும் நாற்றுப்பண்ணைகள், கோவை விதை ஆய்வு துணை இயக்குனரிடம் உரிமம் பெற்றுள் ளதா? என அவசியம் பார்க்க வேண் டும். முக்கியமாக விவசாயிகள் கடை களில் போலி விதைகளை வாங்கி ஏமாற வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறது

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**கண்காட்சியில் அசத்திய காளை**

**பல்லடம், :**காங்கயத்தில் கடந்த 7ம் தேதி கால்நடை பராமரிப்பு துறை சார்பில் நடைபெற்ற கண்காட்சியில் பல்லடத்தை அடுத்த வாவி பாளையத்தை சேர்ந்த

ஆதிஆனந்தனின் காளை முதல் பரிசை தட்டிச்சென்றது.
இதையடுத்து வாவிபாளையத்தை சேர்ந்த விவசாயிகள் கண்காட்சியில் வெற்றி பெற்ற காளைக்கும், காளையைபராமரித்துவந்த ஆதிஆனந்தனுக்கும் சால்வை அணித்தும் பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில் வாவிபாளையம் ஊராட்சி தலைவர் பார்த்தசாரதி, ஒன்றியகுழு உறுப்பினர் அனந்தகிருஷ்ணன், உழவர் உழைப்பாளர் கட்சி மாவட்ட இளைஞர் அணி தலைவர் சோமு மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.
காங்கயத்தில் நடந்த கண்காட்சியில் பல்லடம் வாவிபாளையம் ஆதிஆனந்தனின் காளை முதல் பரிசை தட்டிச்சென்றது.

**விவசாயிகளுக்கு திட்டப் பயிற்சி**

**திருச்சுழி, :**நரிக்குடி பகுதியில் உள்ள விவசாயிகளுக்கான விதை கிராம திட்ட பயிற்சி நடைபெற்றது.
நரிக்குடி பகுதி உசிலங்குளம் கிராமத்தில் வேளாண்மை துறை மூலம் விவசாயிகளுக்கான எண் ணெய் வித்து நிலக்கடலை பயிருக்கு விதை கிராம திட்ட பயிற்சி நடைபெற் றது. இப்பயிற்சியை உசிலங்குளம் ஊராட்சி தலை வர் இந்திரா தொடங்கி வைத்து பேசினார்.
விதை கிராம திட்டத்தின் முக்கியத்துவம் குறித்த தொழில் நுட்பங்களை நரிக்குடி வேளாண்மை உதவி இயக்குநர் துரை கண்ணம்மாள் விரிவாக எடுத்துரைத்தார்.
வேளாண்மை அலுவலர் சாய்லெட்சுமிசரண்யா நிலக்கடலை சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றி பேசினார். துணை வேளா ண்மை அலுவலர் நாராய ணன் விவசாயிகள் எவ்வாறு விதை கிராமம் அமைப்பது குறித்து எடுத்து கூறினார்.
விதை நேர்த்தி மற்றும் உயிர்உர விதைநேர்த்தி குறித்த செயல் விளக்கங்கள் உதவி வேளாண்மை அலுவலர்களால் செய்யப்பட்டது. பயிற்சிக்கான ஏற்பாடுகளை முத்துவேல், ஊர்காவலன், இளங்கோவன், மெய்யழகன் செய்திருந்தனர்.

**நாக்பூரில் கிருஷி வசந்த் திருவிழா குமரியில் இருந்து 90 விவசாயிகள் பங்கேற்பு**

**நாகர்கோவில், :**மகாராஷ்டிர மாநிலம் நாக்பூரில் கிருஷி வசந்த் திருவிழா நடைபெற உள்ளது. இந்த விழாவில் கலந்துகொள்ளும் வகையில் குமரி மாவட்டத்தில் 90 முன்னோடி விவசாயிகள் மற்றும் விவசாய ஆர்வலர்கள் வேளாண்மை துறை மூலம் நாக்பூருக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.
இந்த விவசாயிகள் நாகர்கோவிலில் இருந்து மதுரை வரை சிறப்பு பேருந்து வாயிலாகவும், மதுரையில் இருந்து நாக்பூர் வரை ரயில் மூலமும் செல்ல திட்டமிடப்பட்டு நாகர்கோவில் உழவர் சந்தை அருகில் இருந்து இரு அரசு பேருந்துகள் வாயிலாக அனுப்பி வைக்கப்பட்டனர்.
நாகர்கோவில் உழவர் சந்தை அருகில் நடந்த நிகழ்ச்சியில் வேளாண்மை இணை இயக்குநர் நாகமணிபிள்ளை, துணை இயக்குநர் இளங்கோ, கலெக்டரின் நேர்முக உதவியாளர் போஸ்லின் வின்ஸ்டன் சாம், உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் கலாவதி ஆகியோர் இந்த பயணத்தை தொடங்கி வைத்தனர்.

**ஆவின் பால் தட்டுப்பாடு சமாளிக்க கோவை, ஈரோட்டிலிருந்து கொள்முதல் செய்ய முடிவு**

**ஊட்டி, :** கோடையில் ஏற்படும் பால் பற்றாக்குறையை சமாளிக்க இம்முறை கோவை மற்றும் ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஆவின் நிறுவனத்தில் இருந்து தேவைக்கேற்ப கொள்முதல் செய்து பொதுமக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஆவின் நிறுவன அதிகாரி தெரிவித்தார்.
நீலகிரி மாவட்டத்தில் ஊட்டியில் ஆவின் நிறுவனம் உள்ளது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன் நீலகிரி மாவட்டத்தில் அதிகளவு பால் உற்பத்தியாளர்கள் இருந்தனர். இதனால், ஊட்டி ஆவின் நிறுவனத்திற்கு அதிகளவு பால் விநியோகித்து வந்தனர்.
துவக்கத்தில் பல ஆயிரம் பேர் ஆவின் நிறுவனத்தில் உறுப்பினர்களாக இருந்தனர். ஆவின் நிறுவனமும் லாபத்தில் இயங்கி வந்தது. இங்கு பதப்படுத்தப்படும் பால் நீலகிரி மாவட்டத்திற்கு தேவையான அளவிற்கு

விநியோகம் செய்துவிட்டு, எஞ்சிய பால் வெளி மாவட்டங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வந்தது. கால்நடை தீவன விலை உயர்வு, வன விலங்குகள் தொல்லை மற்றும் மேய்ச்சலுக்கு போதுமான இடம் கிடைக்காமல் பசு மாடுகளை வளர்ப்பதை விவசாயிகள் கொஞ்சம் கொஞ்சமாக தவிர்த்து வருகின்றனர்.

தற்போது இந்நிறுவனத்தின் நேரடி கட்டுப்பாட்டில் 3800 உறுப்பினர்கள் மட்டுமே உள்ளனர். இவர்களிடம் இருந்து நாள் தோறும் 13 ஆயிரத்து 500 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. கொள்முதல் செய்யப்பட்ட பால் பதப்படுத்தப்பட்டு மீண்டும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக வழங்கப்படுகிறது.

நாளொன்றுக்கு 18 ஆயிரம் லிட்டர் பதப்படுத்தப்பட்ட பால் விற்பனை செய்யப்படுகிறது. விநியோகம் செய்யப்படும் பாலை விட கொள்முதல் செய்யும் பாலின் அளவு குறைந்துள்ளதால் தற்போது கோவை ஆவின் நிறுவனத்தில் இருந்து ஒரு நாள் விட்டு ஒரு நாள் 7 ஆயிரத்து 500 லிட்டர் கொள்முதல் செய்யப்படுகிறது.

இது தவிர பாலை மூலதன பொருளாக கொண்டு தயாரிக்கப்படும் நெய், வெண்ணெய், பால்கோவா, ஐஸ்கிரீம் ஆகிய பொருட்கள் தயாரிக்கப்படுகிறது.

தற்போது கொள்முதல் செய்யப்படும் பால் பதப்படுத்தப்பட்ட பின் நீலகிரி மாவட்டத்திற்கு மட்டுமே வினியோகிக்க முடிகிறது.

கோடை காலத்தில் போதுமான உணவு, தண்ணீர் மற்றும் தீவனங்கள் கிடைக்காமல் பால் உற்பத்தி குறைகிறது. இதனால் பாலுக்கு கடும் தட்டுபாடு ஏற்பட்டு பொதுமக்கள் மட்டுமின்றி நீலகிரிக்கு வரும் சுற்றுலா பயணிகளும் கடும் அவதிக்குள்ளாகின்றனர்.

கடந்த ஆண்டுகளில் கோடை சீசனான மார்ச் மாதம் முதல் மே மாதம் வரை ஊட்டி ஆவின் நிறுவனத்தில் இருந்து குறைந்தளவே பாக்கெட் பால் வினியோகம் செய்ய முடிந்தது. பொதுமக்கள் மற்றும் சுற்றலா பயணிகள் தேவைக்கேற்ப பால் வழங்க முடியாத நிலை ஏற்பட்டது.

இதனால் ஈரோடு, கோவை, தர்மபுரி போன்ற மாவட்டங்களில் இருந்து பால் கொள்முதல் செய்து தேவையான அளவு வினியோகம் செய்யப்பட்து. ஆவின் பால் விநியோகம் குறைந்தால் தனியார் பால் விற்பனையாளர்கள் பாலின் விலையை

உடனடியாக உயர்த்தி விடுகின்றனர். இதனால் பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் கடும் அவதிக்குள்ளாகினர்.

இம்முறை பால் தட்டுப்பாட்டை சமாளிக்க முன்னதாகவே ஆவின் நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

ஊட்டி ஆவின் நிறுவன பொதுமேலாளர் ரவிக்குமார் கூறியதாவது: நவம்பர் மாதம் முதல் பிப்ரவரி மாதம் வரை பனி பொழிவு நீலகிரியில்

காணப்படுவதால், போதிய புற்கள் மற்றும் பசுந்தீவனங்கள் கால்நடைகளுக்கு கிடைப்பதில்லை. இதனால் பால் உற்பத்தியில் பாதிப்பு ஏற்படுகிறது. இம்முறை நீலகிரி மாவட்டத்தில் பனி பாதிப்புகள் அதிகளவு ஏற்படவில்லை.

போதுமான தீவனங்கள் மற்றும் புற்கள் கிடைத்து வருகிறது. இது தவிர விவசாயிகளுக்கு தேவையான கால்நடை தீவனங்கள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட நிதி பெற்று மானிய விலையில், தாது உப்புகளும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஓட்ஸ், வெட்கைபுல், பசுந்தீவனங்கள் மற்றும் கால்நடை தீவனங்கள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும். ஒரு சமயம் புற்கள் காய்ந்து இயற்கை உணவு கிடைக்காமல் போனாலும், ஆவின் நிறுவனம் மூலம் தீவனங்கள் வழங்கப்படும். இதனால், பால் உற்பத்தியில் பாதிப்பு இருக்காது.

மேலும், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் உற்பத்தி குறைந்தாலும், விநியோகத்தில் எவ்வித பாதிப்பும் இருக்காது. வழக்கம் போல், அண்டை மாவட்டங்களான கோவை, ஈரோட்டிலிருந்து பால் கொல்முதல் செய்து பொ துமக்களுக்கு தேவையான அளவு வழங்கப்படும். இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது நீலகிரியில் ஆவின் பால் விற்பனை அதிகரித்துள்ளது. பால் விநியோகம் மற்றும் உற்பத்தியை அதிகரிக்க கடும் நடவடிக்கைகள் மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது,

இவ்வாறு ரவிக்குமார் கூறினார்.

**மார்ச் 1 முதல் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பு மருந்து 2ம் கட்டமாக வழங்க ஏற்பாடு**

**ஊட்டி, :** கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பு மருந்து வரும் 1ம் தேதி முதல் நீலகிரி மாவட்டத்தில் இரண்டாம் கட்டமாக வழங்கப்படவுள்ளது.

கடந்த இரு மாதங்களுக்கு முன் திருப்பூர், ஈரோடு மற்றும் பிற மாவட்டங்களில் உள்ள கால்நடைகளுக்கு கோமாரி நோய் ஏற்பட்டது. இதில், ஏராள மான கால்நடைகள் இறந்தன. மற்ற கால்நடைகளுக்கு இந்நோய் பரவாமல் இருக்க உடனடியாக தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன. மேலும், வெளி மாநிலங்களுக்கு கால்நடைகள் கொண்டுச் செல்ல தடை விதிக்கப்பட்டது. தமிழக அரசின் உத்தரவின் பேரில் அனைத்து மாவட்டங்களிலும் கோமாரி நோய் தடுப்பு மருந்து வழங்கப்பட்டது.

நீலகிரி மாவட்டம் மலை மாவட்டம் என்பதால், மற்ற கால்நடைகள் மட்டுமின்றி வன விலங்குகளுக்கும் இந்நோய் பாதிக்காமல் இருக்க நீலகிரியில் ஆவின் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறையின் கீழ் 40 ஆயிரம் மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பு மருந்து வழங்கப்பட்டது.

இதனால், நீலகிரி மாவட்டத்தில் கால்நடை உயிரிழப்பு தடுத்தது மட்டுமின்றி, இந்நோய் பரவாமல் தடுக்கப்பட்டது. இந்நிலையில், இரண்டாம் கட்டமாக வரும் 1ம் தேதி நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து கால்நடைகளுக்கும் கோமாரி நோய் தடுப்பு மருந்து வழங்கப்படுகிறது.

ஆவின் நிறுவன பொதுமேலாளர் ரவிக்குமார் கூறுகையில், நீலகிரி மாவட்டத்தில் ஆவின் நிறுவனத்திற்கு பால் ஊற்றும் விவசாயிகளிடத்தில் மொத்தம் 12 ஆயிரம் கறவை மாடுகள் உள்ளன. இவைகளுக்கு மார்ச் மாதம் 1ம் தேதி முதல் கோமாரி நோய் தடுப்பு மருந்துகள் வழங்கப்படவுள்ளது. கால்நடை பராமரிப்பு துறையினருடன் இணைந்து நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

பால் உற்பத்தியாளர்கள் மட்டுமின்றி, அனைத்து கால்நடைகளுக்கும் இம்மருந்துகள் வழங்கப்படும். தற்போது நீலகிரி மாவட்டத்தில் கோமாரி நோய் அறிகுறிகள் இல்லை. இருப்பினும், முன் எச்சரிக்கை நடவடிக்கையாக இரண் டாம் கட்டமாக மருந்துகள் வழங்கப்படவுள்ளது, என்றார்.

**தாவரவியல் பூங்காவில் மலர் செடிகளை பாதுகாக்க நிழல் வலைகள் அமைப்பு**

**ஊட்டி**, : தாவரவியல் பூங்காவில் வைக்கப்பட்டுள்ள பூச்செடிகள் கருகா மல் பிளாஸ்டிக் போர் வைகள் மற்றும் கோத்தகிரி மலர் செடிகளை கொண்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது.

வரும் மே மாதம் மலர் கண்காட்சி நடவுக்கவுள்ளது. இதற்காக பூங்கா முழுவதிலும் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட மலர் செடிகள் நடவு செய்யப்பட்டுள்ளன. 15 ஆயிரம் தொட்டிகளில் நாற்று நடவு செய்யப்பட்டுள்ளன.

பூங்காவில் உள்ள கண்ணாடி மாளிகையிலும், தொட்டிகளில் நாற்று நடவு செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது.

தற்போது, நீலகிரியில் உறைப்பனி தாக்கம் அதிகமாக காணப்படுகிறது. பகல் நேரங்களில் வெயிலின் தாக்கமும் அதிகமாக காணப்படுகிறது.பூங்காவில் பரியிடப்பட்டுள்ள மலர் செடிகளை பனியில் இருந்து பாதுகாக்க இரவு நேரங்களில் கோத்தகிரி மலர் செடிகளை கொண்டு மூடப்பட்டு பாதுகாக்கப்படுகிறது.

அதேபோல், பகல் நேரங்களில் தற்போது வெயில் வாட்டி எடுப்பதால், கண்ணாடி மாளிகைக்குள் வெப்பம் அதிகரிக்கிறது. இதனால், மலர் செடிகள் வாடிவிடுகின்றன. இந்த வெப்பத்தில் இருந்து காக்க பிளாஸ்டிக் போர்வைகள் (நிழல் வலைகள்) போடப்பட்டு மலர் செடிகள் பாதுகாக்கப்படுகிறது. மேலும், பனியில் செடிகள் கருகாமல் இருக்க நாள் தோறும் தண்ணீர் பாய்ச்சும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மலர் கண்காட்சிக்கு மூன்று மாதங்கள் உள்ள

நிலையில், பூங்காவில் உள்ள அ னத்து மலர் செடிகளுக்கும் உரமிடும் பணிகள், களை எடுக்கும் பணிகள் மற்றும் புல் மைதானத்தை பராமரிக்கும் பணிகள் துரித கதியில் நடந்து வருகிறது.

## 50 பயனாளிகளுக்கு இலவச ஆடுகள்

**கோத்தகிரி:**கோத்தகிரி கொணவக்கரை ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 2 வது கட்டமாக தமிழக அரசின் இலவச ஆடு வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. இதில் ஊராட்சிக்குட்டப்பட்ட மணீஸ் நகர், பாத்தி மட்டம், குறிஞ்சி நகர் உட்பட பல்வேறு ஆதிவாசி கிராமங்களை சேர்ந்த 50 பயனாளிகளுக்கு தலா 4 ஆடு அதனை பராமரிக்க ரூ 2150 வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு கொணவக்கரை ஊராட்சி மன்ற தலைவர் குப்புசாமி தலைமை தாங்கினார்.
துணை தலைவர் கு மார் முன்னிலை வகித்தார். கால்நடை மருத்துவர் டாக்டர் ராஜன் வரவேற்றார். இதில் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் ராஜா, வரதராஜ், சிவராஜ், டாக்டர்கள் ராஜேஸ், உமா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மாவட்டம் முழுவதும் 100 %மானியத்தில் பசுந்தேயிலை கொள்முதல் மையம் இன்கோசெர்வ் தலைவர் தகவல்

**குன்னூர், :** நீலகிரி மாவட்டத்தில் தொழிற்கூட்டுறவு சேவை மையம் (இன்கோசெர்வ்) சார்பில் 15 அரசு கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் இயங்குகின்றன. இதில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர்.
இங்கு உற்பத்தியாகும் டீ தூள் ஊட்டி டீ என்ற பெயரில் மாநிலம் முழுவதும் விற்பனை செய்யப்படுகிறது. ஏல மையங்கள் மூலமாகவும் விற்கப்படுகிறது. கூட்டுறவு ஆலைகளை மேம்படுத்துவது தொடர்பான ஆலோசனை கூட்டம் குன்னூர் இன்கோசெர்வ் அலுவலகத்தில் நேற்று நடந்தது.

ஆலை நிர்வாகிகள் பங்கேற்றனர். பின்னர் இன்கோசெர்வ் தலைவர் சிவகுமார் கூறியதாவது:புதிதாக நஞ்சநாடு பகுதியில் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை கட்டப்பட உள்ளது. இதற்காக நபார்டு வங்கி உதவியுடன் ரூ.2.5 கோடி நிதி பெறப்பட்டுள்ளது. 16 உறுப்பினர்கள் உத்தரவாதம் வழங்கியதன்பேரில் இத்தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தேயிலை விற்பனை அதிகரிக்க கோவை மாவட்டம் அன்னூரில் ரூ.15 கோடியில் டீ பார்க் (தேயிலை பூங்கா) திறப்பதற்கான ஆயத்த பணிகள் நடக்கிறது. ஊட்டி டீ மூலம் கிடைக்கும் வருமானத்தில் மாவட்டத்தில் உள்ள 15 கூட்டுறவு ஆலைகளுக்கு தலா ரூ.10 லட்சம் வீதம் ஒன்றரை கோடி ரூபாய் ஒதுக்கப்படும். புதிய நவீன இயந்திரங்களும் பொருத்தப்பட்டு தரமான தேயிலை தூள் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது இருப்பில் உள்ள அனைத்து டீ தூளையும் வரும் மார்ச் இறுதிக்குள் விற்க திட்டமிடப்பட்டுள்ளது. லாபத்தை அதிகரிக்கவும் முயற்சி செய்கிறோம். மாவட்டம் முழுவதும் தேயிலை வாரியத்தில் 100 சதவீத மானியத்துடன் பசுந்தேயிலை கொள்முதல் நிலையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஆலை பழைய இயந்திரங்களை முறையாக பராமரித்து, உற்பத்தி திறன் அதிகரித்து, மகசூல் காலங்களில் கோட்டா முறையை முழுமையாக ரத்து செய்ய முடிவு செய்துள்ளோம். இதன்மூலம் கூட்டுறவு ஆலைகளில் லாபம் அதிகரிப்பதுடன், விவசாயிகளுக்கும் தேவையான நல உதவிகளும் வழங்க இயலும்.

இந்த ஆண்டு பொதுதேர்வு எழுதும் மாணவ, மாணவர்களுக்கு வெற்றி உங்கள் கையில் நிகழ்ச்சி ஊட்டி அரசு மேல்நிலை பள்ளியில் நேற்று நடந்தது.

**விவசாயிகளுக்கு மானிய விலையில் இயந்திரம் விநியோகம்**

**ராமநாதபுரம், :** ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளுக்கு மானிய விலையில் ரூ.30.92 லட்சம் மதிப்பில் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

ராமநாதபுரம் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது.

இதில் விவசாயிகளுக்கு மானிய விலையில் விவசாய பயன்பாட்டிற்கான பலவகை இயந்திரங்கள் வழங்கப்பட்டன. கலெக்டர் நந்தகுமார், 30 விவசாயிகளுக்கு ரூ.30.92 லட்சம் மதிப்பிலான மினி வீடர், வாட்டர் பம்ப், மர அறுப்பான், கை தெளிப்பான், விசைத் தெளிப்பான், சுழற்கலப்பை உள்ளிட்ட இயந்திரங்களை வழங்கினார். இதில் அரசு மானியம் ரூ.11.45 லட்சம் ஆகும். நிகழ்ச்சியில் வேளாண்மை பொறியியல்துறை செயற்பொறியாளர் யுவராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கிருஷ்ணா நதி கால்வாயில் சுவையான மீன்கள் கிடைப்பதால் மீனவர்கள் போட்டி**



**ஊத்துக்கோட்டை,**

கிருஷ்ணா நதி கால்வாயில் சுவையான மீன்கள் கிடைப்பதால் மீனவர்கள் போட்டி போட்டு மீன் பிடித்து வருகின்றனர்.

<u>கிருஷ்ணா நதி நீர்</u>

திருவள்ளூர் மாவட்டம் பூண்டியில் சத்தியமூர்த்தி அணை உள்ளது. கிருஷ்ணா நதிநீர் பங்கீட்டு திட்டத்தின் கீழ் ஆந்திராவில் உள்ள கண்டலேறு அணையில் இருந்து வந்து சேரும் தண்ணீர், மழை தண்ணீர் இங்கு சேமித்து வைக்கப்பட்டு தேவைப்படும் போது புழல் ஏரிக்கு திறக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்ட பின்னர் சென்னையில் குடிநீராக வினியோகிக்கப்படுகிறது.

கண்டலேறு அணை பூண்டி ஏரியில் இருந்து 178 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. திறந்த வெளி கால்வாய் மூலம் தண்ணீர் திறந்து விடப்படுவது வழக்கம். கடந்த மாதம் 10–ந் தேதி முதல் கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரிக்கு தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. வினாடிக்கு சராசரியாக 600 கனஅடி வீதம் தண்ணீர் பாய்ந்து வந்து கொண்டிருக்கிறது.

மீனவர்கள் போட்டி

இந்த தண்ணீரில் சுவையான கெளுத்தி, கெண்டை உள்பட பல்வேறு ரகங்களை சேர்ந்த மீன்கள் துள்ளிக்குதித்து கொண்டிருக்கின்றன. இதனால் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரி வரை கால்வாய் நெடுகே 300–க்கும் மேற்பட்ட பகுதிகளில் கால்வாய் மீது பாலங்கள் உள்ளன.

இந்த பாலங்கள் மீது நின்று கொண்டு மீனவர்கள் போட்டி போட்டு வலை விரித்து மீன் வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர். ஒவ்வொரு மீனும் சுமார் 2–ல் இருந்து 3 கிலோ எடை உள்ளவையாக உள்ளன. மிகவும் சுவையாக இருப்பதால் மீன்களை வாங்க மக்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## ரெயிலில் இருந்து இறக்காததால் ரூ.10 கோடி கோழித்தீவனம் தேக்கம்



திருப்பூர் ரெயில் நிலையத்தில் சரக்குகள் ஏற்றப்படாமல் காலியாக இருக்கும் லாரிகளை படத்தில் காணலாம்.

**திருப்பூர்,**

திருப்பூரில் சரக்கு இறக்கும் ஒப்பந்ததாரர் களுக்கு இடையே ஏற்பட்ட பிரச்சினை காரணமாக ரூ.10 கோடி மதிப்புள்ள கோழித்தீவனத்தை ரெயிலில் இருந்து இறக்க முடியாமல் தேக்கியது. இதனால் சுமைதூக்கும் தொழிலாளர்கள் நேற்று வேலையிழந்தனர்.

<u>சரக்கு ரெயில்</u>

திருப்பூர் ரெயில் நிலையத் தில் ஒரு பகுதியில் சரக்கு ரெயில்களில் இருந்து சரக்கு களை இறக்குவதற்கு வசதி யாக கூட்ஷெட் பகுதி உள் ளது. பல்லடம், பொள்ளாச்சி பகுதிகளில் உள்ள கோழிப் பண்ணைகளுக்கு தேவை யான கோழித்தீவனம் மகா ராஷ்டிரா மாநிலத்தில் இருந்து அதிகப்படியாக சரக்கு ரெயில் மூலம் திருப் பூருக்கு அனுப்பி வைக்கப் பட்டு வருகிறது. இதுபோல் கோதுமை, மக்காச்சோளமும் அதிகமாக திருப்பூர் வரு கிறது.

சரக்கு ரெயிலில் இருந்து வரும் சரக்குகளை இறக்கி லாரிகளில் ஏற்றி சம்பந்தப் பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கும் பணியை ரெயில்வே நிர்வாகத்தின் அங்கீகாரம் பெற்ற சரக்கு இறக்கும் ஒப் பந்ததாரர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். திருப்பூரில் இதுபோல் சரக்கு இறக்கும் ஒப்பந்ததாரர்களாக மணி, மேகநாதன், சின்னச்சாமி ஆகியோர் கடந்த 45 வருடங் களாக இருந்து வருவதாக

கூறப்படுகிறது. இவர்கள் திருப்பூரில் உள்ள தமிழ்நாடு கூட்ஷெட் சுமைப்பணி தொழிலாளர்கள் சங்கத்தின் (சி.ஐ.டி.யு.) உறுப்பினர்களாக உள்ள 50 பெண்கள் உள்பட 200 பேர் மூலம் சரக்குகளை ரெயிலில் இருந்து இறக்கி, லாரிகளில் ஏற்றி அனுப்பி வைக்கிறார்கள். இதற்காக திருப்பூர் லாரி உரிமையாளர் கள் சங்கத்துக்கு உட்பட்ட 150 லாரிகளை சரக்குகள் அனுப்பி வைக்க பயன்படுத்தி வருகின்றனர்.

<u>புதிய ஒப்பந்ததாரர்</u>

இந்த நிலையில் சரக்குகளை இறக்கும் ஒப்பந்தப்பணியை மந்திரியப்பன் என்பவர் ரெயில்வே நிர்வாகத்திடம் இருந்து கடந்த சில தினங் களுக்கு முன் அனுமதி பெற்ற தாக தெரிகிறது. மகாராஷ்டி ராவில் இருந்து 2500 டன் எடையுள்ள கோழித்தீவனங் களை ஏற்றிக் கொண்டு 42 பெட்டிகளுடன் சரக்கு ரெயில் திருப்பூர் கூட்ஷெட் பகுதிக்கு நேற்று காலை 8 மணிக்கு வந்தது. சரக்கு ரெயி லில் இருந்த கோழித்தீவனங் களை இறக்கி லாரிகளில் ஏற்றுவதற்காக புதிய ஒப்பந்த தாரரான மந்திரியப்பன் 40 லாரிகளுடன் திருப்பூர் கூட் ஷெட் பகுதிக்கு முதல்முறை யாக நேற்று காலை வந் தார்.

அப்போது அங்கு ஏற் கனவே இருந்த பழைய ஒப் பந்ததாரர்களான மணி, மேக நாதன், சின்னச்சாமி ஆகி யோர் தரப்பினர் கோழித்தீவ னத்தை மந்திரியப்பன் தரப் பினர் இறக்குவதற்கு அனு மதிக்கவில்லை. தாங்கள் ஏற்கனவே கோழித்தீவனத்தை இறக்கி வருவதாகவும், ரேஷன் அரிசி, உரம் போன்ற வேறு சரக்குகள் வந்தால் அதை இறக்கிக்கொள்ளுமாறும் பழைய ஒப்பந்ததாரர்கள் தெரிவித்தனர். இதேபோல் சரக்குகளை ஏற்றி செல்வதற் காக வெளியூரில் இருந்து மந்திரியப்பன் லாரிகளை அழைத்து வந்துள்ளதற்கு திருப்பூர் லாரி உரிமையாளர் கள் சங்கத்தினரும் எதிர்ப்பு தெரிவித்தனர். வழக்கமாக பணிகளை மேற்கொண்டு வரும் திருப்பூர் லாரி உரிமை யாளர்கள் சங்கத்தில் பதிவு பெற்ற லாரிகளைத்தான் சரக்குகளை ஏற்றிச் செல்ல அனுமதிக்க வேண்டும் என்று கூறினார்கள்.

<u>லாரிகள் நிறுத்திவைப்பு</u>

இந்த பிரச்சினை காரண மாக சுமைப்பணியாளர்கள் யாரும் பணியில் ஈடுபட வில்லை. ஒப்பந்ததாரர்கள் மற்றும் லாரி உரிமையாளர் களுக்கான பிரச்சினை முடிந் தால், அதன்பிறகு சரக்கு ரெயிலில் இருக்கும் கோழித் தீவன மூட்டைகளை இறக்கி லாரியில் ஏற்றிக் கொடுப்பதாக சுமைப்பணியாளர்கள் சங்கத் தினர் தெரிவித்து விட்டனர். இதனால் சரக்கு ரெயிலில் இருந்து சரக்குகள் இறக்கப் படவில்லை. 100-க்கும் மேற்பட்ட லாரிகள் கூட்ஷெட் மைதானத்தில் நிறுத்தி வைக் கப்பட்டது.

பின்னர் ஒப்பந்ததாரர்கள் மற்றும் திருப்பூர் லாரி உரிமை யாளர்கள் சங்க தரப்பினர் திருப்பூர் ஆர்.டி.ஓ. பழனி குமாரிடம் சென்று முறையிட் டனர். ஏற்கனவே இருக்கும் பழைய ஒப்பந்ததாரர்கள் மூலம் சரக்கு ரெயிலில் உள்ள சரக்குகளை இறக்குமாறு ஆர்.டி.ஓ. கூறி அனுப்பி வைத்தார். ஆனால் புதிய ஒப்பந்ததாரர் மந்திரியப்பன், தான் அழைத்து வந்த லாரி களிலும் சரக்குகளை ஏற்ற வேண்டும் என்று கூறியதாக தெரிகிறது. இந்த கருத்தை திருப்பூர் லாரி உரிமை யாளர்கள் தரப்பினர் ஏற்றுக் கொள்ளவில்லை. இதன் காரணமாக நேற்று மாலை 5 மணி வரை சரக்கு ரெயிலில் இருந்து கோழித்தீவன மூட் டைகள் இறக்கப்படவில்லை. அதனால் ரூ.10 கோடி மதிப் புள்ள கோழித்தீவன மூட்டை களுடன் கூட்ஷெட் தண்ட வாளத்தில் சரக்கு ரெயில் அப்படியே நின்றது.

<u>வேலையிழப்பு</u>

சரக்கு ரெயில் கூட்ஷெட் பகுதிக்கு வந்து சேர்ந்த 8 மணி நேரத்துக்குள் அதில் இருக்கும் சரக்குகளை இறக்கி ரெயிலை அனுப்ப வேண்டும் என்பது ரெயில்வே நிர்வாகத்தின் விதி முறை. அவ்வாறு 8 மணி நேரத்துக்கு மேல் ரெயில் நின் றிருந்தால் ரெயிலில் உள்ள அத்தனை பெட்டிகளுக்கும் ரெயில்வே நிர்வாகத்தின் சார்பில் அபராதம் விதிக்கப் பட்டு அந்த அபராத தொகையை கோழித்தீவனம் வாங்கும் பண்ணை உரிமை யாளர்களி டம் வசூலிக்கப்படும்.

விதிமுறைப்படி நேற்று மாலை 4 மணிக்குள் ரெயிலில் இருந்து கோழித்தீவனங்களை இறக்கி ரெயிலை அனுப்பி இருக்க வேண்டும். ஆனால்

மாலை 5 மணிக்கு மேல் ஆகி யும் கோழித்தீவன மூட்டைகள் எதுவும் ரெயிலில் இருந்து இறக்கப்படவில்லை. இதனால் அபராதம் விதிப்பது உறுதி யானது. கூட்ஷெட் பகுதிக்கு அடுத்து வரும் ரெயில்களும் வர முடியாமல் வழியிலேயே நிறுத்தப்பட்டது. இந்த பிரச்சினையால் சுமை தூக்கும் தொழிலாளர்கள் நேற்று வேலைவாய்ப்பை இழந்தனர். லாரி ஓட்டுனர்களும் பணியில் ஈடுபட வில்லை.

மேலும் ஏதாவது பிரச்சினை ஏற்படாமல் தடுப் பதற்காக குட்ஷெட் வளாகத் தில் திருப்பூர் வடக்கு போலீ சார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

**கோவில் நிலங்களில் விவசாயம் செய்வோர் குத்தகை சம்பந்தமாக பெயர் மாற்றம் செய்ய மக்கள் நீதிமன்றத்தை அணுகலாம் நீதிபதி சேதுமாதவன் தகவல்**



**தஞ்சாவூர்,**

தஞ்சை மாவட்டத்தில் கோவில் நிலங்களில் விவசாயம் செய்வோர் குத்தகை சம்பந்தமாக பெயர் மாற்றம் செய்ய மக்கள் நீதிமன்றத்தை அணுகலாம் என்று தஞ்சை முதன்மை மாவட்ட நீதிபதி சேதுமாதவன் கூறினார்.

இதுதொடர்பாக அவர் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:–

<u>தங்களது பெயருக்கு மாற்றம்</u>

தஞ்சை கோர்ட்டில், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவால் இன்று(புதன்கிழமை) முதல் ஏப்ரல் மாதம் 12–ந் தேதி வரை மக்கள் நீதிமன்றம் நடத்தப்பட உள்ளது. தஞ்சை மாவட்டத்தில் உள்ள கோவில் நிலங்கள், சத்திர நிர்வாகத்திற்கு சொந்தமான நிலங்கள் மற்றும் செங்கிப்பட்டி காசநோய் மருத்துவமனைக்கு சொந்தமான நிலங்களில் குடியிருப்போர், விவசாயம் செய்வோர் மக்கள் நீதிமன்றத்தில் ஆஜராகி தாங்கள் வசிக்கும் நிலங்கள், விவசாயம் செய்யும் நிலங்களை குத்தகை சம்பந்தமாக தங்களது பெயருக்கு, பெயர் மாற்றம் செய்து கொள்ளலாம்.

மேலும் தங்களிடம் உள்ள நிலங்களின் குத்தகை பாக்கி ரசீது பெறவும், குத்தகை தொகையை முடிவு செய்யவும், குத்தகை பாக்கி தொகையை செலுத்துவதற்கு கால அவகாசம் நிர்ணயம் செய்யவும் தஞ்சை மாவட்ட கலெக்டர் சுப்பையன் ஒத்துழைப்புடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கோவில் நிலங்களை பயன்படுத்தும் விவசாயிகள், சத்திர நிர்வாகத்தில் குடியிருக்கும் குத்தகைதாரர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம்.

அரசின் சலுகைகளை பெற முடியும்

மேலும் நிலங்களை தங்களது பெயருக்கு மாற்றம் செய்வதன் மூலம் அவர்களுக்கு விவசாயிகளுக்கான அடையாள அட்டை வழங்கப்படும். அந்த அடையாள அட்டை இருந்தால் மட்டுமே மானிய விலையில் உரங்கள், நெல் கொள்முதல் செய்யப்படும்போது முன்னுரிமை, வங்கிகளில் விவசாயக்கடன் உள்பட பல்வேறு அரசின் சலுகைகளை பெற முடியும்.

இவ்வாறு நீதிபதி சேதுமாதவன் கூறினார்.

**நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை திட்ட பணிகளை செயல் இயக்குனர் ஆய்வு**

**முதுகுளத்தூர்,**

தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை திட்ட பணிகளை செயல் இயக்குனர் ஆய்வு செய் தார்கள ஆய்வு

ராமநாதபுரம் மாவட்டத் தில் ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி மேம்பாட்டு திட்ட செயல்பாடுகள் குறித்த கள ஆய்வு தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை யின் செயல் இயக்குனர் சுரேஷ்குமார் தலைமையில் நடைபெற்றது. கடலாடி யூனி யன் சிறைக்குளம் நீர்வடிப் பகுதிக்கு உட்பட்ட கிராமங்க ளில் ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி மேம்பாட்டு திட்டத் தின் மூலம் அமைக்கப்பட்டுள்ள பண்ணை குட்டைகள் மற் றும் நீர் நிலை ஆதார அமைப் புகளை பார்வையிட்டு கள ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது சிறைக்குளம் ஊராட்சிக்கு உட்பட்ட பகுதி களில் திறம்பட செயல்படும் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு வாழ்வாதார மேம்பாட்டு நிதி யின் மூலம் சுழல் நிதிக்கான கசோலைகளை வழங்கினார். மேலும் புதுநகர் கிராமத்தில் பாய்முடைதல் தொழில் செய்யும் மகளிர் சுய உதவி குழுவின் செயல்பாட்டை பார்வையிட்டு ஊக்கப்படுத்தி னார்.

பணிகள்

இதம்பாடல் கிராமத்தில் ஊராட்சி தலைவி ஜவாகிர் பேகம் தலைமையில் நடை பெற்ற ஊரக மக்கள் பங்கேற்பு முகாமில் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டு இதம்பாடல் கிராமத்தில் பண்ணை குட் டைகள், கிராம ஊரணிகள் அமைத்தல், ஊரணி, கண் மாய் மற்றும் வரத் துக்கால்கள் சீரமைத்தல் போன்ற நீர்வள மேம்பாட்டு பணிகளும், சம உயர வரப்பு அமைத்தல், தாவ ரத்தடுப்பரண்கள் அமைத்தல் போன்ற நிலவள மேம்பாட்டு பணிகளும், பழமரக்கன்றுகள் நடவு செய்தல், வேளாண் பண்ணை உற்பத்தி மேம்பாடு, தீவனப்பயிர் சாகுபடி, சமு தாய நாற்றங்கால் அமைத்தல் போன்ற தாவர வள மேம் பாட்டு பணிகளும், நிலமற்ற

கூலி தொழிலாளர்களுக்கு வாழ்வாதார மேம்பாட்டு பணிகளும், விவசாயிகள், மக ளிர் சுய உதவி குழுக்களுக்கு வருவாய் பெருக்கும் குறுந் தொழில் திட்டங்கள் செயல்ப டுத்தப்பட உள்ளதாக தெரி வித்தனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட வேளாண்மை இணை இயக் குனர் கிருஷ்ணமூர்த்தி, வேளாண்மை துணை இயக்கு னர் கமால்தீன், மாநில முகமை துணை இயக்குனர் முகமது இக்பால், திட்ட பொருளியலர் ஜெயசுதாகர், வேளாண்மை உதவி இயக்குனர் ஜாய்லின் சோபியா, உதவி பொறியாளர் குமரேசன் மற்றும் நீர்வடிப் பகுதி மேம்பாட்டு அணி உறுப்பினர்கள் கலந்து கொண்டு பேசினர்.

**நெல்லை மாவட்டத்தில் சூறாவளி காற்றில் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நிவாரண தொகை கலெக்டர் மு.கருணாகரன் தகவல்**

**நெல்லை** மாவட்டத்தில் சூறாவளிக்காற்றில் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நிவாரண தொகை கூட்டுறவு வங்கி மூலம் வழங்கப்படுகிறது என்று கலெக்டர் மு.கருணாகரன் கூறினார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

<u>சூறாவளிக்காற்றில்..</u>

நெல்லை மாவட்டத்தில் கடந்த 14–4–2013, 15–4–2013 ஆகிய தேதிகளில் வீசிய சூறாவளிக்காற்றினால் நெல்லை, பாளையங்கோட்டை, அம்பை தாலுகா பகுதிகளில் பயிரிடப்பட்ட வாழைகளில் 50 சதவீதத்திற்கு மேல் பாதிக்கப்பட்ட 1,364 விவசாயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.7 ஆயிரத்து 500 வீதம் மொத்தம் பாதிக்கப்பட்ட 311.14 ஹெக்டேர் வாழைப்பயிர்களுக்கு ரூ.23 லட்சத்து 33 ஆயிரத்து 500 நிவாரணதொகை, விவசாயிகளுக்கு வழங்க தமிழக அரசு உத்தரவிட்டு உள்ளது.

இந்த நிவாரணத்தொகை ரூ.23 லட்சத்து 33 ஆயிரத்து 500–ம் நெல்லை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் வைப்பீடு செய்யப்பட்டு பாதிக்கப்பட்ட நபர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

நிவாரண தொகை

இந்த தொகை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுடைய கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட உள்ளது. வங்கி கணக்கு இல்லாத விவசாயிகள் அருகில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி செயலாளரை அணுகி கணக்கு ஆரம்பிக்கு மாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சூறாவளிக்காற்றில் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பட்டியல் நெல்லை, பாளையங்கோட்டை, அம்பை தாலுகா அலுவலகங்களிலும், கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திலும், சம்பந்தப்பட்ட தொடக்கவேளாண்மை வங்கியிலும் வைக்கப்பட்டு உள்ளது.தொடக்கவேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்படும் நிவாரணத்தொகை பெற விவசாயிகள் போட்டாவுடன், இருப்பிட சான்று மற்றும் சாட்சிகளுடன் வங்கி செயலாளர் முன் ஆஜராகி பதிவேட்டில் போட்டோ ஒட்டி கையெழுத்துப்போட்டு பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

**கடலுக்கு செல்லும் மீனவர்கள் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் கலெக்டர் ம.ரவிகுமார் அறிக்கை**



**தூத்துக்குடி,**

தூத்துக்குடி மாவட்டத்தில் கடலுக்கு மீன்பிடிக்க செல்லும் மீனவர்கள் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்து மாவட்ட கலெக்டர் ம.ரவிகுமார் அறிவித்து உள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

வழிமுறைகள்

மீன்பிடித்தொழிலுக்கு படகுகளில் செல்லும் மீனவர்கள் சில நேரங்களில் கவனக்குறைவாக இருப்பதாலோ அல்லது போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளாததாலோ பொருட்சேதங்களும், உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன.

இதுபோன்ற நிகழ்வுகள் கடந்த காலங்களில் தூத்துக்குடி மாவட்டத்தில் குறிப்பிடும்படியாக ஏற்பட்டுள்ளது. அது போன்ற நிகழ்வுகள் நேராத வகையில் தடுக்க மீனவர்கள் சில வழிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

குழுவாக...

மீனவர்கள் நீச்சல் தெரிந்த 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் தான் மீன்பிடிக்க செல்லவேண்டும். மீன்பிடி படகின் உரிமையாளர்கள் குறைந்த வயதினரை மீன்பிடிக்க அழைத்து செல்லக்கூடாது. தொழிலுக்கு செல்லும் போது உயிர்காப்பு கவசம், உயிர்காப்பு வளையம் கண்டிப்பாக கொண்டு செல்லவேண்டும்.

முடிந்தவரை குழுவாக (அல்லது) பிற படகுகளின் கண்பார்வையில் உள்ளபடி தொழில் செய்யுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். நாட்டுப்படகுகளில் பாய்மரம் வைப்பதற்கான வசதிகளை ஏற்பாடு செய்து கொள்வதுடன், அதை முறையாக பராமரிக்கும் பட்சத்தில் அவசரக்காலத்தில் பயன்படும்.

தொடர்பு சாதனங்கள்

இயந்திரமாக்கப்பட்ட படகுகள் எனில் இயந்திரத்திற்கான உதிரி பாகங்கள் மற்றும் குறைந்த பட்சம் ஸ்பேனர் செட் போன்ற இன்றியமையாத உபகரணங்கள் வைத்துக்கொள்ள வேண்டும். ஆழ்கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் அவ்வப்போது கரைக்கு தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு தங்களது இருப்பிடத்தை தெரிவித்தால் நன்மை பயக்கும். மீன்பிடி படகுகளில் செல்போன் சார்ஜர் வசதி ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். வாய்ப்பு இல்லை எனில் கூடுதலாக முழு சார்ஜ் உள்ள ஒரு செல்போனை அவசரத்துக்கு பயன்படுத்த அனைத்து படகிலும் வைத்து கொள்ள வேண்டும். படகுகளில் பதிவு எண்களை தெளிவாக எழுத வேண்டும்.

தொழிலுக்கு செல்லும் காலத்தில் தேவைப்படும் நல்லதண்ணீர் மற்றும் உணவுப்பொருட்கள் எடுத்துச் செல்லவேண்டும். ஆழ்கடலுக்கு செல்லும் படகுகள் உலர் உணவுகளை கண்டிப்பாக எடுத்து செல்ல வேண்டும். படகில் பெரிய ஆரஞ்சு வர்ண துணி, பாய் கட்டாயம் இருக்க வேண்டும். ஆபத்து காலங்களில் கப்பல், விமானம் மூலம் சுலபமாக தேடுவதற்கு ஏதுவாக இருக்கும். இரவெனில் விட்டு விட்டு எரியும் வகையில் விளக்கு வசதி ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். ஒரு விசில் படகில் கட்டாயம் வைத்திருக்க வேண்டும். தொழிலுக்கு செல்லும்போது மீனவர் அடையாள அட்டை மற்றும் படகு பதிவுச்சான்று நகல்களை வைத்திருப்பதுடன், தொழிலுக்கு செல்லும் முன் தொடர்புடைய சங்கங்கள், உரிமையாளர்கள் மற்றும் உறவினர்களிடம் தகவல் சொல்லி விட்டு செல்ல வேண்டும். அவசரத்துக்கு பயன்படும் வகையில் விளக்கு வசதி வைத்து இருக்க வேண்டும்.

இவ்வாறு மாவட்ட கலெக்டர் ம.ரவிகுமார் தெரிவித்து உள்ளார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## திண்டுக்கல்: வறட்சியால் வாழைத்தார் விலை `கிடுகிடு' உயர்வு: ரூ. 10-க்கு ஒரு பழம் விற்பனையால் மக்கள் அதிர்ச்சி



**திண்டுக்கல் மாவட்டம்,** வத்தலகுண்டு வாழைத்தார் சந்தையில் ஒரு தார் ரூ.900 வரை கிடுகிடுவென விலை உயர்ந்துள்ளது. அதனால், ரூபாய்க்கு ஒரு வாழைப்பழம் விற்ற காலம் மலையேறிப்போய், 10 ரூபாய்க்கு ஒரு வாழைப்பழம் என விற்பனையாவதால், பொதுமக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

வத்தலகுண்டு நகரில் வாழைத்தார் விற்பனைக்கு பெரிய சந்தை செயல்படுகிறது. இந்த சந்தை வாரத்தில், திங்கள்கிழமை, வெள்ளிக்கிழமை ஆகிய இரு நாள் கூடுகிறது. திண்டுக்கல், தேனி மற்றும் தமிழகத்தின் பிற மாவட்டங்களில் இருந்து, இங்கு வாழைத்தார் விற்பனைக்கு வருகிறது. இங்கிருந்து கேரளம், கர்நாடகம், ஓசூர், மதுரை, ராமநாதபுரம், சென்னை, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு வாழைத்தார் ஏற்றுமதியாகிறது.

கடந்த இரு ஆண்டுகளாக பருவமழை பொய்த்ததால், திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் வாழை விவசாயம் அழிந்தது. அதனால், தற்போது திருச்சி, குளித்தலை, லால்குடி மற்றும் தமிழகத்தின் பிற மாவட்டங்களில் இருந்து மட்டுமே வத்தலகுண்டு வாழைத்தார் சந்தைக்கு வாழைத்தார் வருகிறது. சாதாரணமாக 7 ஆயிரம் முதல் 10 ஆயிரம் வாழைத்தார்கள், இந்த சந்தைக்கு விற்பனைக்கு வந்தது.

தற்போது வறட்சியால், வெறும் 1,000 முதல் 2000 வாழைத்தார் மட்டுமே விற்பனைக்கு வருகிறது. அதனால், வாழைத்தார் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது.

இதுகுறித்து வத்தலகுண்டு வாழைத்தார் கமிஷன் மண்டி வியாபாரி தாமஸ் கூறியது:

ரூ.300-க்கு விற்ற ரஸ்தாலி வாழைத்தார் தற்போது 3 மடங்கு விலை அதிகரித்து ரூ.600 முதல் ரூ,900 வரை விற்பனையாகிறது. செவ்வாழை ரூ.800 முதல் ரூ.900 வரை விற்பனையாகிறது. பச்சை வாழைத்தார் ரூ.500 முதல் 600 ரூபாய் வரையும், கற்பூரவள்ளி வாழைத்தார் ரூ.400 முதல் ரூ.500 வரையும் விற்பனையாகிறது.

பூவன்பழம் வாழைத்தார் சாதாரண காலத்தில் ரூ.100-க்குக்கூட விற்பனையாகாது. தற்போது, ரூ.400 ரூபாய் முதல் 500 ரூபாய் விற்பனையாகிறது. நாட்டு வாழைத்தார் மட்டும் வத்தலகுண்டு, தேனி பகுதிகளில் சாகுபடி செய்யப்படுவதால், அவற்றின் விலை அதிகளவு உயரவில்லை. இந்த வாழைத்தார் ரூ.300 முதல் ரூ.400 வரை விற்பனையாகிறது. மழை பெய்து மீண்டும் வாழை சாகுபடி அதிகரித்தால் மட்டுமே இந்த விலை குறைய வாய்ப்புள்ளது என்றார்.

ரூபாய்க்கு ஒரு வாழைப்பழம் என்ற நிலை போய், தற்போது 10 ரூபாய்க்கு ஒரு வாழைப்பழம் என சில்லறைக் கடைகளில் விற்பனையாவதால், ஏழை, நடுத்தர மக்கள் வாழைப்பழம் வாங்கிச் சாப்பிட முடியாமல் தவிக்கின்றனர்.